சுபீட்சம்

SUPEEDSAM

EVERYTHING FOR PEOPLE

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

சுபீட்சம் மின்னிதழை பார்வையிட www.supeedsam.com

செவ்வாய்க்கிழமை 30.05.2023

supeedsam.com

supeedsam@gmail.com


# தமிழ்த் தேசியக் கட்சிகளின் புதுடில்லி பயணம் குழப்பத்தில்



இந்திய உயர்ஸ்தானிகருடனான சந்திப்பின்போது புதுடில்லி விஜயம் குறித்துப் பேசியிருந்தாலும், அதுகுறித்து எவ்வித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை என ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் புதுடில்லிக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவிருப்பதாக வெளியாகியிருக்கும்

02 ஆம் பக்கத்தில்...

## மீண்டும் தலைதூக்கும் இனவாதம்



சரத்வீரசேகர அண்மைக்காலமாக தமிழ் மக்களை மிரட்டும் தொனியில் கருத்துகளை வெளியிடுவதாகவும் அவ்வாறு வெளியிடும் கருத்துக்களை இந்தியா உட்பட சர்வதேச நாடுகள் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும் ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் க.துளசி குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இனப்படுகொலை செய்த படையினரை நினைவுகூரும் நினைவு தூபியில் தமிழர்களையும் நினைவு கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அதனை வன்மையாக கண்டிப்பதாக ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் க.துளசி தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## புத்தரை அவமதித்து பௌத்தர்களை தூண்டிவிட சதி!

புத்தரை அவமதித்து பௌத்தர்களை தூண்டிவிட திட்டமிட்ட சதி நடவடிக்கை ஒன்று முன்னெடுக்கப்படுகிறதா என்பது தொடர்பில் பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ புத்தரை அவமதிக்கும் வகையில் தெரிவித்த கருத்து மற்றும் நடாஷா எதிரிசூரிய என்ற பெண்ணின் கருத்து ஆகியற்றின் அடிப்படையில் இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

02 ஆம் பக்கத்தில்...





## பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்த மட்டு. மிக்கேல் கல்லூரி மாணவன்

02 ஆம் பக்கத்தில்...

## அரசாங்கம் எடுக்கும் சில முடிவுகளில் திருப்தியில்லை

அரசாங்கம் எடுக்கும் சில முடிவுகள் குறித்து திருப்தியடைய முடியாவிட்டாலும் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்தி நாட்டுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த முடியும் எனவும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## பறிபோகும் நிலையில் 37 தமிழ் கிராமங்கள்

மகாவலி அதிகார சபையின் செயல்பாடு என்பது தமிழர் தாயகப் பகுதிகளில் தமிழர்களின் இனப் பரம்பலை அழிப்பதற்கும் சிங்கள மக்களை தமிழர் தாயகப் பகுதிகளுக்குள் கொண்டுவருவதற்கும் தமிழர்களை இன ரீதியாக இல்லாமல் செய்வதற்குமான இன அழிப்பின் நீண்ட கால தந்திரமான செயற்பாடு தான் இந்த மகாவலியின் செயல்பாடு என்றும் இதை முழுமையாக கண்டிப்பதாகவும் முழுமையாக எதிர்ப்பதாகவும் வன்னி பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

02 ஆம் பக்கத்தில்...


MATHE BILDUNGSZENTRUM

கணித கற்கைநெறி மையம்

MBZ

கல்வியே துணை

பள்ளித் தலமனைத்தும் பேரெடுக்கும் பிள்ளைகள்.

அள்ளிப் பெற்றுவரும் நிறைவான புள்ளிகள்!

உள்ளதை சொல்வதெனில் எங்ஙனம் சாத்தியம்..

எள்ளளவும் பொய்யில்லை எட்டிவந்து பாரும்!!

- MATHE BILDUNGSZENTRUM

Mathe மகேந்திரா-வின் தெளிவான கற்பித்தலில் திருப்தியுறும் பெற்றோர்கள்.

S.MAHENDIRAN

076 431 83 79

mbz.mahe@gmail.com

MATHE மட்டுமல்ல

Deutsch, Franzósisch, Englisch,Gymi Prüfung

BMS, HMS, FMS, Gymi Probe

அத்தனைக்கும் கீழ்காணும் இடங்களில்

Oerlikon, Uster, Schaffhausen



"சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்"

aaDaa Finance 0798000100

Aadaa Finance GmbH

Dr.(h.c) Nageswaran Arulrasa D.Litt

CEO

Eidgenössische Finanzmarktaufsicht Nr.35302

Fachmann für versicherung & vorsorge

Hauptstrasse 54

6015 Luzern

Switzerland

079 8000 100

arulnages@yahoo.com

finma :34598

25605: cicero




## இலங்கைக்கு 350 மில்லியன் அமெரிக்க டோலர்

( சில்மியா யூசுப்)

மணிலாவைத் தலைமையகமாகக் கொண்ட ஆசிய அபிவிருத்தி வங்கி, சர்வதேச நாணய நிதியத்துடன் ஸ்திரப்படுத்தல் திட்டத்தின் ஒரு பகுதியாக இலங்கைக்கான 350 மில்லியன் அமெரிக்க டொலர் வரவு செலவுத் திட்ட ஆதரவுக் கடனை அங்கீகரிப்பதாக அறிவித்தது.

'நாட்டின் ஆழமான நெருக்கடி மற்றும் இலங்கை மக்கள், குறிப்பாக ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள், குறிப்பாக பெண்கள் மீதான அதன்

02 ஆம் பக்கத்தில்...

# காத்தான்குடி ஹிழுரியா வித்தியாலய மாணவன் கேடட் சீனியர் சாஜனாக பதவி உயர்வு



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

காத்தான்குடி ஹிழுரியா வித்தியாலய மாணவன் யாசீர் அறபாத் அன்பாஸ் அஹமட் தேசிய மாணவ படையணியின் சீனியர் சாஜனாக பதவி உயர்வு பெற்று கௌரவிக்கப்பட்டார். இப்பாடசாலையின் முப்பெரும் விழா அன்மையில் (23) பாடசாலைள வளாகத்தில் இடம்பெற்றது. மேலதிக அரசாங்க அதிபர் திருமதி சுதர்சினி ஸ்ரீகாந்தின் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட இந்நிகழ்வில் 38வது படையணியின் நிர்வாக நிறைவேற்று அதிகாரி கப்டன் எம். ஜெகதரன், மட்டக்களப்பு மத்தி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம். எம். அமீர் ஆகியோர்களால் இவருக்கான பதவி உயர்வு வழங்கப்பட்டதுடன் பட்டியும் அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

தேசிய மாணவர் படையணி பாதுகாப்புப் பிரிவின் 38வது படையணியின்கீழ் செயற்பட்டு வருகின்றது. பாடசாலை மாணவர்களின் தன்னார்வுத் தொண்டினையும் ஒழுக்கத்தினையும் மேம்படுத்தும் வகையில் இம்மாணவப் படையணியினர் செயற்பட்டு வருகின்றனர். சீனியர் சாஜன் அன்பாஸ் அஹமட் கடந்த 2021 ஜனவரி 1ஆந் திகதி மாணவர் படையணியில் இநை;து கொண்டார். 25 மாணவர்கள் கொண் கெடட் படையணியின் தலைவராக செயறப்பட்ட அன்பாஸ் சாஜனாக தெரிவு செய்யப்பட்டு அதற்கான பயிற்சியினை ரன்தம்பேயில் பூர்த்தி செய்து கொண்டார். இதனைத் தொடர்ந்து சீனியர் கெடட் ஸ்பெசல் சாஜன் பயிற்சி உட்பட மேலும் நான்கு பயிற்சிகளைப் பூர்தி செய்துள்ளார். இதன்மூலம் மாணவ படையணியின் சீனியர் சாஜனாக தெரிவு செய்யப்பட்டு நியமனம் பெற்றுள்ளார்.

மாவட்ட ரீதியில் கெடட் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற போட்டிகளில் காத்தான்குடி ஹிழூரியா வித்தியாலய கெடட் அணி சிறப்பு வெற்றிகளைப் பெற்று ரன்தம்பே பயிற்சிக்கு தெரிவாகியது. இதன்மூலம் மட்டக்களப்பு மத்தி வலயத்திலிருந்து ரன்தம்பே பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது பாடசாலை இதுவென்ற பெருமையினையும் பெற்றுக் கொண்டது.

இதேவேளை அன்பாஸ் அஹமட் இம்முறை க.பெ.த. சாதாரன தரப் பரீட்சை எழுதும் மாணவன் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி மாணவனும்,ஜனாதிபதி சாரணர் விருது பெற்றவருமான தேவேந்திரன் மதுஷிகன் (வயது-20) பாக்குநீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார்.

நேற்று அதிகாலை 1 மணியளவில் தனுஷ்கோடியிலிருந்து தலை மன்னாரை நோக்கி தனது நீச்சல் பயணத்தை ஆரம்பித்த தேவேந்திரன் மதுஷிகன் பிற்பகல் 3.05 மணியளவில் தலைமன்னாரை வந்தடைந்தார்.

தனுஷ்கோடிக்கும் தலைமன்னாருக்கும் இடையே உள்ள சுமார் 30 கிலோ மீற்றர் தூரத்தை பாக்கு நீரிணையை நீந்திக் கடந்து சாதனை படைத்துள்ளார். இதன் போது மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல்,மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி கலாமதி பத்மராஜா, மன்னார் மாவட்ட சாரணர் இயக்க ஆணையாளர் ஸ்ரான்லி டிமேல் லெம்பேட் ,வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ்.வினோ நோகராதலிங்கம்,சாள்ஸ் நிர்மலநாதன் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் (ஜனா) மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞ.அன்ரனி டேவிட்சன், பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் செயலாளர் டானியல் வசந்த ,ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ் ,தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளர் லுஸ்ரின் மோகன்ராஜ்,ஏ.கே. ஆர்.நிறுவன பணிப்பாளர் றொஜன் உட்பட பலரும் கலந்து கொண்டு வரவேற்றனர்.

## இலங்கைக்கு 350 மில்லியன் அமெரிக்க டொலர்

தாக்கம் குறித்து ADB கவலை கொண்டுள்ளது' என்று அஈஆ தலைவர் மசட்சுகு அசகாவா தெரிவித்துள்ளார்..

'தற்போதைய சவால்கள் மற்றும் பொருளாதார ஸ்திரத்தன்மை, நிலையான மீட்சி மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சியை நோக்கி முன்னேறும் இலங்கையுடன் ADB நிற்க உறுதிபூண்டுள்ளது.'

ADB ஆனது IMF திட்டத்தின் வாழ்க்கையின் மூலம் தொடர்ச்சியான கொள்கைக் கடன்கள் மூலம் சுமார் 2.0 பில்லியன் அமெரிக்க டாலர்களை வழங்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

'உள் மற்றும் வெளிப்புற ஏற்றத்தாழ்வுகளின் காரணங்களை நிவர்த்தி செய்வதற்கும், நிலையான கடன் பாதைக்கு திரும்புவதற்கும் இலங்கை துணிச்சலான சீர்திருத்தங்களை மேற்கொண்டுள்ளது' என ஆசிய அபிவிருத்தி வங்கி ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## புத்தரை அவமதித்து பௌத்தர்களை...

சர்ச்சைக்குரிய விடயம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையிலான அரசாங்கம் விசேட கவனம் செலுத்தி வருகிறது.

இது குறித்து இன்று ஜனாதிபதி தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதாக அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும், ஜெரம் பெர்னாண்டோ மற்றும் நடாஷா எதிரிசூரிய ஆகியோரின் கருத்துக்களுடன் தொடர்புடைய இரண்டு சம்பவங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்துமாறு பொலிஸ் மா அதிபர் சந்தன விக்ரமரத்ன குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோவின் கருத்தினால் பௌத்தர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டிருந்ததுடன், அது தொடர்பான அறிக்கையை வெளியிட்ட பின்னர் ஜெரோம் பெர்னாண்டோ நாட்டை விட்டு வெளியேறியிருந்தார்.

இது தொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினரினால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்த நிலையில் கொழும்பில் உள்ள பிரதான பாடசாலையொன்றின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நகைச்சுவை நிகழ்ச்சியை தொகுத்து வழங்கிய நடாஷா எதிரிசூரிய என்ற பெண், புத்தரை அவமதிக்கும் வகையில் மேலும் பல கருத்துக்களை வெளியிட்டிருந்தார். இதனால் நாட்டில் பெரும் பரபரப்பு ஏற்பட்டதுடன், குறித்த பெண் சிங்கப்பூருக்கு தப்பிச் செல்ல நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்திற்கு சென்ற போது குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

எனினும் தான் தெரிவித்த கருத்து வேண்டுமென்றே வெளியிடப்பட்ட கருத்து அல்ல எனவும், பௌத்தர்களை புண்படுத்தியிருந்தால் மன்னிப்பு கோருவதாகவும் நடாஷா குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் தெரிவித்துள்ளார்.

## மீண்டும் தலைதூக்கும் இனவாதம்

ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக சந்திப்பு யாழில் உள்ள விடுதி ஒன்றில் இடம்பெற்றிருந்த நிலையில் அவர் இவ்வாறு தெரிவித்திருந்தார். அனைத்து இனத்தவர்களும் நினைவு கூருவதற்கான பொதுவான நினைவுத்தூபி அமைக்கும் செயற்பாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் பொதுநினைவுத்தூபி என்பது பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் உணர்வுகளை வெகுவாகப் பாதிக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# இலக்கியவாதிகள் அனைவரும் சமூகப்போராளிகளே

## நிலவின் கர்ப்பங்கள் நூல் வெளியீட்டு விழாவில் அரச அதிபர்

**(வி.ரி. சகாதேவராஜா)**

இலக்கியவாதிகள் ஒரு வகையில் சமூக போராளிகளே. சமூக அவலங்களை சுட்டிக் காட்டும் காலக் கண்ணாடி அவர்கள்.

இவ்வாறு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் காரைதீவில் நடைபெற்ற 'நிலவின் கர்ப்பங்கள்' நூல் வெளியீட்டு விழாவில் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

காரைதீவின் இளங்கவிஞர் விபுலசசி எழுதிய 'நிலவின் கர்ப்பங்கள்' கன்னி கவிதை நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (27) சனிக்கிழமை மாலை 3 மணியளவில் காரைதீவில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண கூட்டுறவுத்துறை ஆணையாளரும் கிழக்கு மேலதிக மாகாண கல்வி பணிப்பாளருமான எந்திரி நடராஜா சிவலிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் கலந்து சிறப்பித்தார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில்..

பொருளாதார நெருக்கடி மிகுந்த இந்த காலகட்டத்தில் கவிஞர் விபுலசசி, தனது தந்தை தமிழாசான் அமரர் நல்லதம்பி மனோகரன் அவர்களின் 24 வது வருட ஞாபகார்த்தமாக இந்த கவிதை நூல் தொகுதியை வெளியிடுவது சாதாரணமானதல்ல.



140 பக்கத்தில் 96 கவிதைகளை அழகாக கோர்த்து அடுக்கி உள்ளார் .கவிஞர் விபுலசசி மனித அவலங்களை மனிதத்துவத்தை சிறப்பாக சொல்லுகின்றார். இந்தக் கவிதை நூல் சாகித்திய பரிசு பெறும் என்பதில் ஐயமில்லை.காரைதீவின் மைந்தன் சசிப்பிரியன் ஈழத்து இலக்கிய உலகில் நிச்சயமாக பிரகாசிப்பார். அவர் மேலும் பல நூல்களை படைக்க வேண்டும் என்றார்.

முதல் பிரதியை மட்டக்களப்பு தமிழ்ச் சங்கத் தலைவர் சைவப் புரவலர் விநாயகமூர்த்தி ரஞ்சிதமூர்த்தி நூலாசிரியர் மனோகரன் சசிப் பிரியனிடமிருந்து பெற்றுக் கொண்டார். ஏனைய அகதிகளுக்கும் கலந்து கொண்டவரகளுக்கும் பிரதிகள் வழங்கப்பட்டன.

எழுத்தாளரும் உதவி கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா நிகழ்ச்சிகளை நெறியாள்கை செய்தார்.

நூல் நயவுரைகளை வெல்லாவெளி உதவி பிரதேச செயலாளர் வி.துலாஞ்சனன், கிழக்கு மாகாண கிராமிய கைத்தொழில் துறை திணைக்கள பிரதிப் பணிப்பாளர் இராகி. இளங்குமுதன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நூல் வெளியீட்டு உரையை சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் பொது சத்திரசிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி டாக்டர் நடேசன் அகிலன் நிகழ்த்தினார். வாழ்த்துரைகளை கிழக்குப் பல்கலைக்கழக தொழில்நுட்பபீட பீடாதிபதி கலாநிதி தவநாயகம் மதிவேந்தன் மற்றும் கவிஞர் வில்லு பாரதி முரளிதரன் ஆகியோர் நிகழ்த்தினர்.

நூலாசிரியரின் உறவினரான ஓய்வு நிலை அதிபர் க.புண்ணியநேசன் நன்றியுரையாற்றினார்.

கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த ஆதார வைத்தியசாலையின் தாதிய உத்தியோகத்தரான மனோகரன் சசிப்பிரியனின் கன்னி கவிதை நூல் இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

## பறிபோகும் நிலையில் 37 தமிழ் கிராமங்கள்

அவர் மேலும் தெரிவிக்கையில், மகாவலி அதிகார சபையால் முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களில் 1988 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் மூலம் 14 கிராம அலுவலர் பிரிவுகள் அபகரிக்கப்பட்டு யுத்தத்தில் மக்கள் இடம் பெயர்ந்த போது முழுமையாக அங்கு சிங்கள குடியேற்றங்களை நிறுவிவெலி ஓயா என்ற ஒரு புதிய பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டிருக்கிறது.

வடக்கு கிழக்கை பிரிக்கின்ற நோக்கத்துக்காக இந்த மகாவலி அதிகார சபை புதிய ஒரு பிரதேச செயலகத்தை உருவாக்கி பிற்பாடு கொக்கிளாய் முதல் செம்மலை வரை இருக்கின்ற 6 கிராம சேவகர் பிரிவுகளை அபகரிக்க முயற்சி எடுத்த போது எங்களுடைய தொடர் அழுத்தம் காரணமாக தற்காலிகமாக அந்த திட்டம் நிறுத்தப்பட்டிருக்கிறது.

மகாவலி என்பது தமிழர் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றங்களையும் சிங்கள இனப்பரம்பலையும் செய்வதற்காக அரசாங்கத்தால் நீண்ட கால திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒரு செயல்பாடு.

அந்த வகையில் தற்பொழுது மகாவலி ஒ வலயம் என்ற ஒன்றை புதிதாக உருவாக்குவதற்காக முல்லைத்தீவு மாவட்டத்தினுடைய துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவில் இருக்கும் 7 கிராம அலுவலர் பிரிவுகளும், மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் இருக்கின்ற 15 கிராம அலுவலர்கள் பிரிவுகளும், மன்னார் மாவட்டத்தில் இருக்கின்ற மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் 15 கிராம அலுவலர் பிரிவுகளும் உள்ளடங்களாக மொத்தம் 37 கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கி மகாவலி அதிகார சபை புதிய வர்த்தமானி அறிவித்தல் செய்வதற்காக பிரதேச செயலகங்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது .

இவ்விடயத்தை எதிர்த்து நான் பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றை முன் வைத்திருக்கிறேன். அதற்கு நீர்ப்பாசன அமைச்சர் எதிர்வரும் பாராளுமன்ற அமர்வின் போது பதில் அளிப்பதாக கூறியிருக்கிறார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் பாலியாறு, அந்தோனியார்புரம், ஆத்திமோட்டை, இலுப்பக்கடவை, கள்ளியடி, கூராய், கோவில் குளம், காயா நகர், பெரிய மடு கிழக்கு, பெரிய மடு தெற்கு, பள்ளமடு, விடத்தல்தீவு கிழக்கு, விடத்தல் தீவு மேற்கு, விடத்தல் தீவு வடக்கு, விடத்தல்தீவு மத்தி ஆகிய கிராமங்களையும், துணுக்காய் பிரதேச செயலக பிரிவில் அனிச்சங்குளம், பாரதி நகர், புகழேந்தி நகர் திருநகர், ஜோக புரம் மத்தி, ஜோக புரம் கிழக்கு, ஜோக புரம் மேற்கு கிராமங்களும், மாந்தை கிழக்கு பிரதேச செயலக பிரிவில் அம்பாள் புரம், கரும்புள்ளையான், கொல்லி விலாங்குளம், மூன்று முறிப்பு, நெட்டாங்கண்டல், கொட்டருத்த குளம், பாலிநகர், பாண்டியன் குளம், பொன் நகர், பூவரசங்குளம், செல்வபுரம், சீராட்டி குளம், சிவபுரம் வன்னி விளாங்குளம், விநாயகபுரம் ஆகிய 3% கிராம அலுவலர் பிரிவுகளையும் ஒ வலயத்தின் ஊடாக மகாவலி அதிகார சபையில் கீழ் கொண்டு வந்து இந்த நிலங்களில் இருக்கும் குளங்களின் கீழ் காணப்படுகின்ற வன இலாக திணைக்களம், வனஜீவராசிகள் திணைக்களம் ஆகியவற்றின் கீழ் உள்ள காணிகளை அபகரித்து அதன் மூலம் சிங்கள மக்களுக்கு அதை நீண்ட கால குத்தகை வழங்குவதோ அல்லது அந்த பிரதேசத்தில் சிங்கள மக்களை குடியேற்றுவதுதான் மிக வேகமாக மகாவலி அதிகார சபை செய்யப்படுகின்றது.

மகாவலி L வலயம் முல்லைத்தீவு மாவட்டத்தில் 1988 ஆம் ஆண்டு வர்த்தமானி அறிவித்தல் ஊடாக நிர்ணயம் செய்யப்பட்டது. இன்றைக்கு 35 வருடங்கள் கடந்தும் மகாவலி தண்ணீர் இன்னும் வரவில்லை.

மகாவலி தண்ணீர் அங்கு வராமல் இருக்கும் போது அங்கு புதிய சிங்கள பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டு சிங்கள மக்களும் குடியேற்றப்பட்டு மகாவலி அபிவிருத்தி என்ற பெயரில் காணிகள் அபகரிக்கப்பட்டு சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டிருக்கின்றார்கள்.

மகாவலி அபிவிருத்தி அதிகார சபையின் இந்த திட்டம் என்பது தமிழர்களுடைய இன பரம்பலை அழிப்பதற்கும் சிங்கள மக்களை இங்கு கொண்டுவருவதற்கும் தமிழர்களை இனரீதியாக இல்லாமல் செய்வதற்கு இன அழிப்பின் ஒரு நீண்ட கால தந்திரமான செயல்பாடுதான் இந்த மகாவலி அதிகார சபையின் செயல்பாடு.

இதை முழுமையாக நாங்கள் கண்டிக்கின்றோம். முழுமையாக எதிர்க்கின்றோம். இதை நடைமுறைப்படுத்த விடாமல் செய்வதற்கு பல முயற்சி செய்துள்ளேன். பாராளுமன்றத்தில் பிரேரணையை முன் வைத்துள்ளேன். அதையும் மீறி ஜனாதிபதியை சந்திப்பதற்காக நான் அனுமதி கேட்டிருக்கின்றேன். அவரிடம் குறித்த விடயம் தொடர்பில் தெரியப்படுத்துவேன்.

அதையும் மீறி மகாவலி J வலயம் மகாவலி அதிகார சபையினால் வர்த்தமானி பிரசுரம் செய்யப்பட்டால் வெகுஜன போராட்டத்தின் ஊடாக மக்கள் போராட்டத்தின் ஊடாக முழுமையாக முல்லைத்தீவு, மன்னார் மக்கள் இணைந்ததை இத் திட்டத்தை தடுத்து நிறுத்த வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை எனவும் அவர் தெரிவித்துள்ளார்

## அரசாங்கம் எடுக்கும் சில முடிவுகளில் திருப்தியில்லை

முலடியன பிரதேசத்தில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் ஹக்மன தொகுதி அதிகார சபைக்கூட்டத்தில் அவர் இதனை கூறியுள்ளார்.

சில முடிவுகள் நாம் கட்டாயம் எடுக்க வேண்டிய முடிவுகளாக இருக்கின்றன. சில முதலீட்டாளர்களுக்கு நாட்டை திறந்து விட வேண்டும்.

சில நிறுவனங்களுடன் நாம் மிகவும் திறந்த மனப்பான்மையுடன் பணியாற்ற வேண்டும்.

நாட்டின் ஏதேனும் ஒரு நிறுவனம் நஷ்டத்தில் இயங்கின்றது என்றால், அதனை இலாபமீட்டும் நிறுவனமாக மாற்றும் வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்.

அனைத்து விடயங்களையும் நடைமுறைப்படுத்தும் போது நாட்டுக்கு உகந்த வகையிலும் மக்களுக்கு உகந்த வகையிலுமான பொறிமுறையை கையாள வேண்டும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச நாட்டை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் ஒப்படைக்கும் போது 6.8 வீத பொருளாதார வளர்ச்சி காணப்பட்டது.

மீண்டும் நாட்டை கோட்டாபய ராஜபக்சவிடம் ஒப்படைக்கும் போது 3 வீதத்திற்கும் குறைவான பொருளாதார வளர்ச்சியே காணப்பட்டது.

2020 ஆம் ஆண்டுக்கு பின்னரே நாட்டில் பொருளாதார நெருக்கடி உருவானதாக சிலர் கூறுகின்றனர்.

எனினும் அதிகளவான கடனை நல்லாட்சி அரசாங்கமே பெற்றுக்கொண்டுள்ளது. இதனை நான் கூறவில்லை அனுரகுமார திஸாநாயக்க கூறுகிறார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச போரை செய்துக்கொண்டு நாட்டை அபிவிருத்தி செய்ய பெற்றுக்கொண்ட கடனை போன்று சுமார் நான்கு மடங்கு கடனை நல்லாட்சி அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ளது. இது எவருக்கும் மறைக்க வேண்டிய விடயமல்ல.

அதேவேளை போராட்டம் என்பது மூன்றாவது தரப்பு முன்னெடுத்த வேலைத்திட்டம். எனினும் நேர்மையாக போராட்டத்தில் கலந்துக்கொண்டவர்களும் உள்ளனர்.

உண்மையாக போராட்டத்தில் கலந்துக் கொண்ட தரப்பினரும் உள்ளனர். இவர்களுக்கு மத்தியில் போராட்டத்தை வழிநடத்திய மூன்றாம் தரப்பும் இருந்தது.

போராட்டத்தில் கலந்துக்கொண்ட பலர் இறுதியில் சிலரது பகடை காய்களாக மாறினர்.

போராட்டம் காரணமாக நாட்டின் பொருளாதார வீழ்ச்சி அதிகரித்தது.

இதனால், பாதிக்கப்பட்ட சுற்றுலாத்துறை தற்போது மெதுவாக முன்னேற்றமடைந்து வருகிறது எனவும் நாமல் ராஜபக்ச மேலும் தெரிவித்துள்ளார்.

## தமிழ்த் தேசியக் கட்சிகளின்

செய்திகள் உண்மைக்குப் புறம்பானவை என்றும், தற்போது இந்தியாவுக்கு அரசியல் ரீதியான விஜயத்தை மேற்கொள்ளும் உத்தேசம் இல்லை என்றும் தமிழரசுக்கட்சி மற்றும் ஜனநாயக தமிழ்த்தேசியக்கூட்டணியின் பிரதிநிதிகள் ஊடகங்களுக்கு உறுதிப்படுத்தியுள்ளனர்.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் வடக்கு, கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் அரசியல் தீர்வு மற்றும் அதிகாரப்பகிர்வு குறித்த பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றன.

இதனைத்தொடர்ந்து அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் விடயத்தில் கூட்டமைப்பு மீண்டும் இந்தியாவின் ஆதரவை நாடுமா என்ற கேள்விகள் முன்வைக்கப்பட்டுவந்த பின்னணியிலேயே கூட்டமைப்பின் பிரதிநிதிகள் புதுடில்லிக்கு விஜயம் மேற்கொள்ளவிருப்பதாக செய்திகள் வெளியாகியிருந்தன.

அதனை முற்றாக மறுத்துள்ள தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமாக இரா.சம்பந்தன், தற்போது இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளும் உத்தேசம் எதுவும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

அதனை மீளுறுதிப்படுத்தியுள்ள கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், இந்திய விஜயம் குறித்த திட்டம் எதுவுமில்லை எனக் கூறியுள்ளார்.

இதனை ரெலோவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதனும் மறுத்துள்ளார்.

இது குறித்து புளொட் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் கூறியுள்ளதாவது, இந்தியாவுக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு புதுடில்லியில் இருந்து உத்தியோகபூர்வ அழைப்பு எதுவும் கிடைக்கவில்லை.

இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் குறித்த திட்டம் எதுவும் இல்லை அத்தோடு ஏற்கனவே புதுடில்லிக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு பிளவுபட முன்னரான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழைப்புவிடுத்திருந்த போதிலும், அதற்குக் கட்சியின் தலைவர் சம்பந்தன் 'வரவில்லை' எனக் கூறிவிட்டார். தற்போது இவ்விடயத்தில் இந்தியா பெருமளவுக்கு அக்கறை காண்பிக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

மேலும், இந்திய உயர்ஸ்தானிகருடனான சந்திப்பின்போது புதுடில்லி விஜயம் குறித்துப் பேசியிருந்தாலும், அதுகுறித்து எவ்வித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# திருமேலையில் கிழக்கு ஆளுநர் தலைமையில் தேசிய மர நடுகை தினம் ஆரம்பம்





(அ . அச்சுதன்)

தேசிய சுற்றாடல் வாரத்தை முன்னிட்டு தேசிய மரநடுகை தினம் ஞாயிறு காலை 10.00 மணிக்கு (28) கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் திருகோணமலை நகரசபை வளாகத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் கிழக்கு மாகாண அரச உயர் அதிகாரிகள், திருகோணமலை நகரசபையின் செயலாளர் வெ. இராஜசேகர் உட்பட நகரசபையின் உத்தியோகத்தர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.

# 'மட்டு முயற்சியாண்மை - ௨0௨3' பிரதேச மட்ட விற்பனை கண்காட்சி




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் ஏற்பாட்டில் இடம்பெற்ற ''மட்டு முயற்சியாண்மை -2023'' உள்ளூர் உற்பத்தி பொருட்களுக்கான பிரதேச மட்ட விற்பனைக் கண்காட்சியானது இன்று (29) பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தலைமையில் பிரதேச செயலகத்தின் முன்பாக இடம்பெற்றது.

மண்முனை வடக்கு பிரதேச செயலாளரினால் சிறுதொழில் முயற்சியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு பெறுமதி சேர் பொருள்களை உற்பத்தி செய்வதற்கான ஆலோசனைகள், மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டன.

இப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சிறு தொழில் முயற்சியாளர்களினால் 30 இற்கும் அதிகமான கூடாரங்களில் உற்பத்திப் பொருட்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்ததோடு, இக் கண்காட்சியில் கலந்து கொண்டோரினால் பெருமளவான உற்பத்திப் பொருட்ளை கொள்வனவு செய்வதில் ஆர்வம் செலுத்தியமையை காணக்கூடியதாக இருந்தது.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர்களான சியாஹுல்ஹக், திருமதி.பிரசந்தன் லக்சண்யா, பிரதேச செயலக கணக்காளர் சி.புவனேஸ்வரன், பிரதி திட்டமிடல் பணிப்பாளர்களான திருமதி கணேசமூர்த்தி ஜெயராஜினி மற்றும் திருமதி சி.பிரணவசோதி, கிராம நிர்வாக உத்தியோகத்தர் கே.ராஜன், மாவட்ட செயலக சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி பிரிவின் முயற்சியாண்மை அபிவிருத்தி பயிற்சி உத்தியோகத்தர்களான தே.கிருஷ்ணவேணி மற்றும் ஆர்.ஜசோதா, பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

# அதிபருக்கு எதிராகவும் சார்பாகவும் மாணவர்கள்,பெற்றோர்கள் ஆர்ப்பாட்டம்!




(ஐ.எம்.எம் நாஸிம் )

சம்மாந்துறை கல்வி வலயத்திற்குட்பட்ட சம்மாந்துறை ஜமாலியா வித்தியாலயத்தின் அதிபரின் இடமாற்றத்தை இரத்துச்செய்யுமாறு கோரி இன்று காலை 09 மணியளவில் சம்மாந்துறை வலயக் கல்விஅலுவலகத்திற்கு முன்பாக கிழக்கு பக்கத்தில் சுமார் 40 இற்கும் மேற்பட்ட மாணவர்களும், அவர்களின்பெற்றோர்களும் வலயக் கல்வி அலுவலகத்தின் நுளைவாசலில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதே வேளை இன்னுமொரு தரப்பினராக ஒரு சில மாணவர்களும், அவர்களின் பெற்றோர்களும் குறித்தஅதிபரின் இடமாற்றத்தை இரத்துச் செய்ய வேண்டாமென்று கோசமிட்டு சம்மாந்துறை வலயக் கல்விஅலுவலகத்திற்கு முன்பாக மேற்குப் பக்கத்தில் நின்று வலயக் கல்வி அலுவலகத்தின் நுளைவாசலில்ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

குறித்த இரு சாரரினதும் இந்த ஆர்ப்பாட்டம் சுமார் 45 நிமிடங்கள் நீடித்தன.

இதே வேளை, சம்மாந்துறை பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டனர்.

அதிபரின் இடமாற்றத்தை இரத்துச் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைத்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அதிபர் வேண்டும், எங்கள் பிள்ளைகளின் விடுதலைப் பத்திரத்தை தா, போன்ற கோசங்கள் எழுப்பினார்கள்.

இதே வேளை, அதிபரின் இடமாற்றத்தை இரத்துச்செய்ய வேண்டாமென்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பாடசாலை அபிவிருத்திக் குழுவுக்கு தெரியாமல் சுமார் 42 இலட்சம் ரூபா பெறுமதியான கட்டிடத்தைநிர்மாணம் செய்த ஊழல் மிக்க அதிபரின் இடமாற்றத்தை இரத்துச்செய்ய வேண்டாமென்று கோசமிட்டனர்.

இந்நிலையில் சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.எம்.செய்யத் உமர் மௌலானா ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதுடன் அவர்களினால் கையளிக்கப்பட்ட மகஜரையும்பெற்றுக் கொண்டார்.

அத்தோடு தங்களின் கோரிக்கைகளை மாகாணக் கல்விப் பணிப்பாளர் மற்றும் மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆகியோர்களுக்கு அறிவித்து அவர்களின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக நடவடிக்கைகளைஎடுக்க இருப்பதாகத் தெரிவித்தார்.

# உலக உணவுத் திட்ட பிரதிநககளுடன் கிழக்கு ஆளுனர் கலந்துரையாடல்



(ஹஸ்பர்)

கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் தலைமையில் மாகாண பிரதம செயலாளர் மற்றும் அரச அதிகாரிகள் இணைந்து உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான தலைவர் .சித்திக் மற்றும் அவருடைய அதிகாரிகளுக்குமிடையே கலந்துரையாடல் ஒன்று (27) கொழும்பில் மேற்கொள்ளப்பட்டது.

கிழக்கு மாகாணத்தில் பொருளாதார பின்னடைவால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மூன்று வேளை உணவு வழங்குவதற்கான வேலைத்திட்டத்தை ஆரம்பிப்பது குறித்தும், இலங்கையிலேயே

கிழக்கு மாகாணத்தில் பெண்களை தலைமைத்துவமாக கொண்ட குடும்பங்கள் அதிகமாக காணப்படுவதால், அவர்களுக்காக புதிய வேலைத்திட்டம் அறிமுகப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதன் போது உலக உணவு திட்டத்தின் நிர்வாகிகள் தாங்களால் முடிந்த முழு ஆதரவை வழங்குவதாக தெரிவித்தனர்.

இதில் ஆளுனரின் செயலாளர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# வாழைச்சேனையில் இளைஞர், யுவதிகளுக்கான 06 ம் கட்ட தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறை!!




(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மனித மேம்பாட்டு அமைப்பினால் இளைஞர், யுவதிகள், அமைப்பின் அங்கத்தவர்களுக்கு 6 கட்டங்களாக நடைபெற்ற தலைமைத்துவப் பயிற்சிப்பட்டறையின் இறுதிக்கட்டம் தன்னம்பிக்கையுள்ள எதிர்கால இளைஞர், யுவதிகளை உருவாக்குதல் எனும் தொனிப்பொருளை அடிப்படையாகக் கொண்டு (27) சனிக்கிழமை வாழைச்சேனை தேசிய இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தில் நடைபெற்றது.

மனித மேம்பாட்டு அமைப்பின் தலைவர் எஸ்.ஏ.முகம்மட் அஸ்லத்தின் வழிகாட்டலிலும் அமைப்பின் சாய்ந்தமருது அமைப்பாளர் ஆர்.அல்முன்தஸீரின் ஒருங்கிணைப்பிலும் அமைப்பின் வாழைச்சேனை பிரதேச அமைப்பாளரான இஸட்.எப்.ஸிஹானி, ஓட்டமாவடி பிரதேச ஒருங்கிணைப்பாளரான இஸட்.எப்.ஸிமானி ஆகியோர்களின் ஏற்பாட்டிலும் தேசிய இளைஞர் படையணி வாழைச்சேனை பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரி லெப்டினன் கேர்ணல் எம்.எச்.எம்.ரவூப் தலைமையிலும் இளைஞர், யுவதிகளுக்கான விரிவுரைகள், பயிற்சிகள், களச்செயற்பாடுகளும் நடாத்தப்பட்டது.

இப்பயிற்சிப்பட்டறையில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களைச்சேர்ந்த இளைஞர், யுவதிகள் கலந்து கொண்டதுடன், அன்று மாலை லெப்டினன் கேர்ணல் எம்.எச்.எம்.ரவூப் அவர்களினால் கலந்து கொண்ட இளைஞர், யுவதிகளுக்கு சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டது.

# 19 ஆண்டுகள் கடந்தும் கொலையாளிகள் சுதந்திரமாக வெளியில் நடமாடுகின்றனர் நீதி மறுக்கப்பட்ட சமூகமாக ஊடகர்கள்

ஊடகவியலாளர் நடேசன் (ஐயாத்துரை நடேசன்) அவர்களின் 19ம் ஆண்டு நினைவு வணக்கநாள் நாளை அனுஸ்டிக்கவுள்ள நிலையில் இதுவரை அவரது கொலைக்கான நீதி கிடைக்கவில்லை என்பது ஒரு கசப்பான உண்மை என்றுதான் கூறவேண்டும்.

மட்டக்களப்பில் தனது வீட்டிலிருந்து 31.05.2004 அன்று அலுவலகம் நோக்கி பணிக்காக சென்றுகொண்டிருந்த வேளை ஆயுததாரிகளால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப் பற்றாளர் ஊடகவியலாளர் நடேசன் (ஐயாத்துரை நடேசன்) அவர்களின் 19ம் ஆண்டு நினைவு வணக்கநாள். இன்றும் அவருக்கான நீதி கிடைக்கவில்ல.

நான்கு பிள்ளைகளின் தந்தையான இவர் படுகொலை செய்யப்பட்டபோது அகவை 50 ஆகும்.

யாழ்ப்பாணம் நெல்லியடியில் பிறந்து வளர்ந்த ஐ.நடேசன் தொழில் நிமிர்தம் பல ஆண்டுகள் மட்டக்களப்பில் இருந்து வாழ்ந்ததுடன், கிழக்குமக்கள் மீதும், அந்த மண் மீதும் அளப்பரிய பற்றுக் கொண்டிருந்தார்.

நீண்ட காலம் ஊடகப் பணி செய்து அனுபவம் பெற்றிருந்த இவர், ஊடகத்துறையில் முழு நேரமாகப் பணியாற்றாது விட்டாலும், ஒரு முழுநேர ஊடகவியலாளன் ஆற்றும் பணிக்கு ஈடாக, அல்லது அதற்கு மேலாகவும் தனது ஊடகப்பணியை செவ்வனே ஆற்றியிருந்தமை யாவரும் அறிந்த உண்மை.

இவரது ஊடகப்பணிக்கு சாகித்திய விருது, சிறந்த ஊடகவியலாளர் விருது (2000), ஆளுநர் விருது போன்ற பல்வேறு விருதுகள் வழங்கப்பட்டமை, அவரது ஊடகப் பணிக்கு கிடைத்த சான்றுகளாகும். இவர் படுகொலை செய்யப்பட்ட பின்னர் கூட தனது தலைசிறந்த ஊடகப் பணிக்காக மதிப்பளிக்கப்பட்டவர்.

20 வருடங்களுக்கு மேலாக கொழும்பு வீரகேசரி பத்திரிகையின் செய்தியாளராகவும், 'நெல்லை நடேசன்' என்ற பெயரில் பத்தி எழுத்தாளராகவும் இருந்த இவர், 1997ஆம் ஆண்டு முதல் லண்டனை தளமாகக் கொண்டியங்கிய ஐ.பி.சி வானொலி, கொழும்பு சக்தி தொலைக்காட்சி உட்பட ஏனைய பல ஊடகங்களுக்கு தனது இறுதி மூச்சுவரை உண்மையாகவும், நேர்மையாகவும் பணியாற்றியிருந்தார்.

தமிழர்களுடைய வரலாறுகளை மடக்களப்பு மக்கள் மட்டுமன்றி, இன அழிப்பை அதிகம் எதிர்கொண்ட தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலைகள் பற்றிய விபரங்களை விரல் நுனியில் வைத்திருந்த இவர், அந்த மக்கள் நினைவுகூரப்பட வேண்டும் என்பதிலும், அந்தப் படுகொலை பற்றிய விபரங்களை ஏனையவர்கள், குறிப்பாக இளையோர் அறிந்திருக்க வேண்டும் என்பதிலும் கரிசனை கொண்டிருந்தவர்.

இனப் படுகொலைகள் மட்டுமன்றி மட்டக்களப்பு பற்றியும், கிழக்கு மாகாணம் பற்றியும் எப்பொழுது எந்தத் தகவல் யார் கேட்டாலும் உடனே சொல்லும் ஆற்றல் கொண்டிருந்த இவர், சொல்வதுடன் நிறுத்தி விடாது அவற்றை எழுதி தொலைநகலில் அனுப்பியும் வைப்பவராக இருந்தவர் என்பது நிதர்சனம்.

ஏதாவது ஒரு இனப் படுகொலை அல்லது முக்கிய விடயங்கள் பற்றி ஊடகங்கள் கேட்க மறந்து விட்டால் கூட அதனை ஞாபகம் ஊட்டி உடனே அனுப்பி வைப்பார்.

எதனையும் துணிகரமாக நேருக்கு நேர் பேசும் இவரது நடைமுறை, உண்மையை அல்லது மக்களிற்கு பாதகமான விடயங்களைக் காட்டும் இவரது குணாம்சம் என்பன காரணமாக பல தடவைகள் பல்வேறு எதிர்புகளையும், இன்னல்களையும் எதிர்கொண்டவர்.

பல தடவைகள் நேரடியாகவும், தொலைபேசி ஊடகவும் கொலை மிரட்டல், அச்சுறுத்தலுக்கு உள்ளாகியிருந்த போதிலும், அவரது வீட்டின் மீது குண்டுத் தாக்குதல் (2000ஆம் ஆண்டு) இடம்பெற்ற போதிலும் கூட, அஞ்சாது தனது குடும்பத்துடன் இறுதிவரை மட்டு மண்ணில் இருந்து மக்களுக்காகக் குரல்கொடுத்த ஒரு சிறந்த ஊடகர்.

மட்டக்களப்பில் சிறீலங்கா படையினரது கட்டுப்பாட்டில் இருந்த நகர் பிரதேசத்தில் வாழ்ந்த போதிலும், அவ்வப்பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளின்



நிருவாகக் கட்டமைப்புக்குள் ஏனைய ஊடகவியலாளர்களுடன் சென்று அங்குள்ள மக்களின் பிரச்சினைகளையும், கஸ்டங்களையும் வெளிக்கொண்டு வந்தவர்.

பல இக்கட்டான காலங்களில் கூட இவர் போன்ற ஊடகவிலாளர்கள் (தற்பொழுது நாட்டில் வாழ முடியாது புலம்பெயர்ந்துள்ளவர்கள் உட்பட) மக்களிற்காகவும், அவர்களில் நல்வாழ்விற்காகவும், உரிமைகளுக்காவும் ஆற்றிய, ஆற்றிக்கொண்டிருக்கும் பணிகளை புலம்பெயர்ந்த மக்கள் மறந்துவிடக்கூடாது.

நாட்டுப்பற்றாளர் என ஐய்யத்துரை நடேசன் அவர்கள் மதிப்பளிக்கப்பட்டதன் மூலம் அவர் ஆற்றிய பணியை நாம் எடைபோட முடியும்.

ஊடகவியலாளர் நாட்டுப்பற்றாளர் ஜி.நடேசன், மாமனிதர் சிவராம், மயில்வாகன் நிமலராஜன், லசந்த விக்கிரதுங்க, டிச்சர்ட் டி சொய்சா முதல் இன்றுவரை 47க்கும் மேற்பட்ட ஊடகர்கள் இதுவரை படுகொலை செயப்பட்டுள்ளனர்.

இவர்களைப் படுகொலை செய்தவர்கள் யார் என்று தெரிந்திருந்தும், அவர்கள் இன்று சுதந்திரமாக வெளியில் நடமாடிக் கொண்டிருக்கின்றமையை அவதானிக்க கூடியதாக இருந்தாலும் அவர்கள் இன்று வரை தண்டிக்கப்படவும் இல்லை, இழக்கப்பட்ட உயிர்களுக்கு இதுவரை நீதி கிடைக்கவும் இல்லை.

சவால் மிகுந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் பல ஊடக ஜம்பவான்களை இழந்த இந்த மண்ணில் இன்றும் கூட அச்சுறுத்தலுக்கு மத்தியிலேயே ஊடகர்களின் பயணங்கள் தொடர்ந்து கொண்டிருக்கின்றது .

அன்று நடேசன் யாரால் சுட்டுக் கொல்லப்பட்டாரோ அவர்கள் இன்றும் அதே பாணியில் தங்களது நடவடிக்கைகளை மட்டக்களப்பு மண்ணில் மேற்கொண்டு தான் வருகின்றார்கள்.

இன்று வரை இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான நீதிகள் வழங்கப்படவில்லை ஊடகவியலாளர்களை கடத்தியும், காணாமல் ஆக்கியும், படுகொலை செய்தவர்களை மாறி மாறி வந்த அரசாங்கங்கள் பாதுகாத்துக் கொண்டே இருக்கின்றது.

ஆகவே உயிரிழந்த ஊடகவியலாளர்களுக்கான சர்வதேச பொறிமுறை ஊடாக சர்வதேச ஊடக அமைப்புகள் இவற்றை கவனத்தில் எடுத்து இன்றும் கண்முன் நடமாடிக் கொண்டிருக்கும் கொலையாளிகளை சர்வதேச சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளருக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும் அவர்களது குடும்பங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும் வடக்கிலும் கிழக்கிலும் தொடர்ச்சியாக அச்சுறுத்தப்படும் ஊடகவியலாளர்களுக்கான பாதுகாப்பு கருத்தில் கொள்ளப்பட வேண்டும் .

இனிமேலும் இது போன்ற படுகொலைகள் மூலம் ஊடகவியலாளர்களின் உயிர்களை இழக்காமல் பாதுகாக்கப்பட வேண்டும். அப்போதுதான் இந்த படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர்களின் ஆத்மா சாந்தியடையும் .

ஒரு பேனா போராளியான ஊடகவியலாளர்கள் இன்றும் பல அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்படுவதும், அவமானப்படுத்தப்படுவதும் போன்ற நடவடிக்கைகள் தொடர்ந்து வண்ணமே இருக்கின்றது.

ஜனநாயகத்தின் நான்காவது தூணாக கருதப்படும் ஊடகம், ஊடகவியலாளர்கள் ஊடக சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டும் ஊடகவியலாளர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் கொலையாளிகள் சட்டத்தின் முன்னிறுத்தப்பட வேண்டும் நீதி நிலைநாட்டப்பட வேண்டும்

ஊடகத்துறைக்கு தன்னை அர்ப்பணித்த தந்தையை இழந்து துடிக்கும் பிள்ளைகளுக்கும், கணவனை இழந்து துயரப்படும் அவரது மனைவிக்கும், நல்ல ஒரு ஊடக நண்பனை இழந்து துடிக்கும் சக ஊடக நண்பர்களுக்கும் மீண்டும் ஒரு தடவை ஆழந்த இரங்கலைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

**சசி புண்ணியமூர்த்தி**

# 38 வருட ஆசிரியர்சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார் ஹுசைன்





**(ந.குகதர்சன்)**

காத்தான்குடி மத்திய கல்லூரியில் 33 வருட காலமாக ஆசிரியராக, பகுதித்தலைவராக, பிரதி அதிபராக என்று பல்வேறுபட்ட வகிபாகங்களை வகித்து வந்த எமது மதிப்பிற்குரிய ஹுசைன் சேர் அவர்கள் 02.06.2023ல் இருந்து ஓய்வு பெற்று செல்ல உள்ளார்கள் என பாடசாலை அதிபர் எம்.ஏ.நிஹால் அகமட் தெரிவித்தார்.

02.06.1963 ஆம் ஆண்டு பிறந்த இவர் காத்தான்குடி 5 ஜாமியுள்ளாபிரீன் லேனில் வசிக்கின்றார்.

தனது ஆரம்பக் கல்வியை மெத்தைப் பள்ளி வித்தியாலயத்திலும், இடைநிலைக் கல்வியை காத்தான்குடி மத்திய கல்லூரியிலும், உயர்தர கல்வியை மட்டக்களப்பு இந்துக் கல்லூரியிலும் கற்றார்.

ஆசிரியர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டு 2%.12.1984 ஆம் ஆண்டு புத்தள மாவட்டத்தின் கற்பிட்டி அல் அக்ஸா மகா வித்தியாலயத்திற்கு விஞ்ஞான ஆசிரியராக நியமனம் செய்யப்பட்டதில் இருந்து தனது ஆசிரியர் சேவையை ஆரம்பித்தார்.

1988/89 கல்வியாண்டில் அட்டாளைச்சேனை ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் விஞ்ஞான பயிற்சியினை மேற்கொண்ட பின்னர் 01.01.1990 ஆம் ஆண்டில் பயிற்றப்பட்டப்பட்ட விஞ்ஞான ஆசிரியராக காத்தான்குடி மத்திய கல்லூரிக்கு இடமாற்றம் பெற்று வந்தார்.

அன்றிலிருந்து நீண்ட காலமாக எமது காத்தான்குடி மத்திய கல்லூரியில் கடமையாற்றிய நிலையில் 08.03.2013 இல் இடமாற்றம் வழங்கப்பட்டு புனித மிக்கேல் கல்லூரிக்குச் சென்றார்.

ஹுசைன் சேர் அவர்களின் சேவை எமது மத்திய கல்லூரிக்கு அவசியம் என கருதிய அக் காலப்பகுதியில் எமது பாடசாலையின் அதிபராக கடமையாற்றிய அல்ஹாஜ் யூ.எல்.ஏ.முபாறக் அவர்களின் முயற்சியின் பயனாக 7 மாதங்களில் பின்னர் மீண்டும் இடமாற்றம் ஒன்றின் மூலம் காத்தான்குடி மத்திய கல்லூரியில் தனது பணியை தொடர்வதற்காக இணைந்து கொண்டார்.

38 வருட கல்விப் பணியினை நிறைவு செய்து 02.06.2023 ஆம் திகதி முதல் ஓய்வு பெற உள்ள ஹுசைன் சேர் அவர்கள் 33 வருடங்கள் காத்தான்குடி மத்திய கல்லூரியிலேயே தனது கல்விப் பணியினை ஆற்றியுள்ளார்கள்.

தனது சேவைக் காலத்தில் பட்டப் படிப்பினையும், பட்ட பின் கல்வி டிப்ளோமாவினையும் பூர்த்தி செய்த இவர்கள்

பாடசாலையில் விஞ்ஞானப் பாடத்தை கற்பிக்கும் ஆசிரியராக மாத்திரம் அல்லாமல் பகுதித் தலைவராக மற்றும் பிரதி அதிபராகவும் தனது கடமையை சிறப்பாக இப்பாடசாலையில் ஆற்றியுள்ளார்கள்.

க.பொ.த சாதாரண தர வகுப்பு மாணவர்களுக்கு நீண்ட காலமாக விஞ்ஞானப் பாடம் கற்பித்த இவர்களிடம் கற்ற நூற்றுக்கணக்கான மாணவர்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு துறைகளில் பிரகாசிக்கின்றனர்.

25 வருடங்களுக்கு மேல் க.பொ.த. சாதாரண தர விஞ்ஞான பாட விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் பரீட்சகராக ஈடு பட்டதுடன், அக்குழுவில் பிரதம பரீட்சகராகவும் கடமையாற்றிய அனுபவங்களைப் பெற்ற இவர்கள் உயர்தரப் பரீட்சை மேற்பார்வையாளராகவும் கடமையாற்றியுள்ளார்கள்.

தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி பயிற்சியளிக்கும் அரசின் திட்டத்தின் கீழ் 2001 ஆம் ஆண்டு மூன்று வாரம் இஸ்ரேல் நாட்டில் நடைபெற்ற அந்நாட்டின் பாடவிதானம் மற்றும் பாடசாலை தொடர்பான பயிற்சியினை பெற்ற குழுவில் ஹுசைன் அவர்களும் உள்ளடக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

தனது சேவைக் காலத்தில் காத்தான்குடி மத்திய கல்லூரியில் 12 அதிபர்களின் கீழ் பணியாற்றிய ஹுசைன் அவர்கள், பாடசாலை பல்வேறு சவால்களை சந்தித்த போதெல்லாம் பாடசாலையின் முன்னேற்றத்திற்காக தனது முழுமையான பங்களிப்பை வழங்கியவர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இவரது மனைவி எம்.ஏ.எஸ்.ஹபீபா அவர்கள் ஓர் ஆசிரியராக அல் ஹிறா மகா வித்தியாலயம், மெத்தைப் பள்ளி வித்தியாலயம் மற்றும் நூறானியா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் கடமையாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ளார்கள்.

ஹுசைன் சேர் அவர்களின் இரு ஆண் பிள்ளைகளில் ஒருவர் றுகுனு பல்கலைக் கழகத்தில் பொறியியல் தொழிநுட்ப பீடத்தில் கல்வி கற்று பட்டம் பெற்றுள்ளதுடன்,

மற்றையவர் பேராதனை பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்தில் கல்வி கற்று வருகின்றார்.

இரு பெண் பிள்ளைகளில் ஒருவர் தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வணிகத் துறையில் கல்வி கற்று பட்டம் பெற்றுள்ளதுடன் தற்போது முகாமைத்துவ உதவியாளராக கடமையாற்றுகின்றார். மற்றவர் உயர்தர விஞ்ஞான பிரிவில் கல்வி கற்கின்றார்.

நீண்ட கால அனுபவம் உள்ள ஹுசைன்



சேர் அவர்கள் பாடசாலையில் இருந்து ஓய்வு பெற்று செல்வது பாடசாலைக்கு பெரும் இழப்பாக கருதப்படுகிறது.

ஓய்வு பெற்றுச் செல்லும் ஹுசைன் சேர் அவர்களின் சேவையை இறைவன் பொருந்திக் கொள்ள வேண்டும் எனவும்,

ஓய்வு காலம் சிறப்பாக அமையவும், அவர்களின் தேக ஆரோக்கியத்திற்காகவும், மன நிம்மதிக்காவும் இறைவனை பிரார்த்திப்போம் என்றார்.

# கோடி கோடியாய் சம்பாதிக்கும் ஆலயங்கள் இந்து மக்களின் வறுமையை போக்க முடியாதா?

## காரைதீவில் மேலதிக அரச அதிபர் ஜெகதீசன்கேள்வி!







( வி.ரி. சகாதேவராஜா)

வறுமையை காரணம் காட்டி இந்து மக்கள் மதம் மாற்றப்படுகின்றார்கள் என்று கூக்குரலிடுகின்றோம். ஏன் இந்து தனவந்தர்களால், இந்து அமைப்புகளால் இந்துமக்களின் வறுமையை துன்பத்தை போக்குவதற்கு முடியாதா? கோடி கோடியாய் சம்பாதிக்கின்ற ஆலயங்களுக்கு இது முடியாதா ?

இவ்வாறு, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் காரைதீவில் இடம் பெற்ற வைபவமொன்றில் உரையாற்றிய போது கேள்வி எழுப்பினார்.

இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் அம்பாறை மாவட்ட கிளை, மாவட்டத்தில் உள்ள 360 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு தலா 25 கிலோ கோதுமை மற்றும் 25 கிலோ அரிசி என்பவற்றை வழங்கி வைக்கும் நிகழ்வு காரைதீவு விபுலானந்தா மணிமண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது .

இந்து ஸ்வயம் சேவக சங்க அம்பாறை மாவட்ட தலைவர் இரா.குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் மேலும் பேசுகையில்..

இந்து மக்கள் மக்களின் வறுமையினை பயன்படுத்தி மாற்று மதத்தினர் உதவியை செய்து மதம் மாற்றி வருகின்றனர். இதனை தொடர்ச்சியாக காணக்கூடியதாக இருக்கின்றது. இந்த நிலைமையை ஏன் இந்து அமைப்புகளால் இணைந்து ஏன் நிவர்த்தி செய்ய முடியாது? அதுபோல கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் பெரிய பெரிய ஆலயங்கள் இந்த இந்து மக்களின் வறுமையினை அல்லது துயரை ஏன் துடைக்க முடியாது? அம்பாறை மாவட்டத்தில் இருக்கின்ற அதே போல் மட்டக்களப்பு மாவட்டத்தில் இருக்கின்ற பெரிய ஆலயங்கள் சேர்ந்தாலே இந்து மக்களின் வறுமையை நிச்சயம் போக்க முடியும்.

இறைவன் நேரடியாக வந்து மக்களின் பிரச்சினைகளை தேவைகளை ஒருபோதும் தீர்த்து வைப்பதில்லை. மாறாக சில மனிதர்களூடாக அமைப்புகளூடாக நம்மை போன்றவர்களை கருவியாக பயன்படுத்தியே மக்களின் பிரச்சினைகளை தேவைகளை தீர்த்து வைக்கின்றார்.

எனவே அந்த அமைப்பினர் மனிதாபிமானத்துடன் செயல்பட்டு இந்த மக்களின் வறுமையை போக்க முன்வர வேண்டும் என்று கூறி வருகின்றோம் ஆனால் அது அவர்களது காதுகளில் ஏறுவதாக இல்லை.

நாங்களும் ஒவ்வொரு கூட்டத்திலும் சொல்லிக் கொண்டிருக்கின்றோம் ஆலயங்கள் தங்கள் திருவிழாக்கள் என்றால் மக்களிடம் கையேந்துகிறார்கள். அதே மக்கள் அனர்த்தத்தில் அல்லது நாட்டு பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கின்ற பொழுது அந்த மக்களுக்கு பெரிதாக உதவுவது இல்லை. இதுபோன்ற காரணங்களினால் அவர்கள் மதம் மாறுவதில் ஒரு பக்கம் நியாயமும் இருக்கின்றது. எனவே அந்த கேள்விக்குரிய விடை எம்மிடம் தான் உள்ளது என்பதனை மறந்து விட முடியாது. இங்கு அமெரிக்காவில் வாழ்கின்ற இந்து அன்பர்கள் அளித்த அன்பளிப்பு இந்த மக்களுக்கு வழங்கப்படுகின்றது. அதையிட்டு அவர்களுக்குநன்றி கூறுகின்றோம் .ஆனால் இதையிட்டு சந்தோசம் அடைய முடியாது .ஏனென்றால் இங்குள்ள இந்து தனவந்தர்கள் அமைப்புக்கள் ஆலயங்கள் இந்த விடயத்தை கவனிக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்த மத மாற்றங்களை தவிர்க்கலாம் தடுக்கலாம். இங்கே இந்து சேவக சங்க அம்பாறை மாவட்ட கிளை பாரியதொரு பணியை செய்து வருவதையிட்டு சந்தோசமடைகின்றேன். மேலதிக அரசாங்க அதிபர் என்ற வகையில் காரைதீவிலிருந்து ஏனைய தமிழ் கிராமங்களில் இருந்து புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழ்கின்ற இந்துஅன்பர்கள் இங்கு கஷ்டப்பட்டு வாழ்கின்ற இந்து மக்களுக்கு உதவுவதற்கு நீங்கள் நேசக்கரம் நீட்ட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன். என்றார்.

முதற்கட்டமாக சம்மாந்துறை காரைதீவு பிரதேசங்களைச் சேர்ந்த 169 விதவைத் தாய்மார்களுக்கு இந் நிவாரணம் முறைப்படி வழங்கி வைக்கப்பட்டன.

பிரதேசத்திலுள்ள முக்கிய பிரமுகர்கள் அதிதிகளாக அழைக்கப்பட்டிருந்தனர்.

நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் சிறிகாந்தன் நன்றியுரையாற்றினார்.

## குருக்கள்மாரும் ஆர்வம் செலுத்திய நற்பிட்டிமுனை இரத்ததான முகாம்





( வி.ரி. சகாதேவராஜா)

நற்பிட்டிமுனை இந்து இளைஞர் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இரத்த தான முகாம்(28) ஞாயிற்றுக்கிழமை சிவசக்தி மகா வித்யாலயத்தில் நடைபெற்றது.

குருதி வழங்குவதில் ஆலய குருக்கள்மாரும் ஆர்வம் செலுத்தினர்.

கல்முனை ஆதார வைத்திய சாலையின் உதவியோடு உதிரம் கொடுப்போம் உயிர் காப்போம் என்ற திட்டத்தின் கீழ் இந்த இரத்த தான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணி முதல் 4:00 மணி வரை இந்த முகாம் இடம்பெற்றது என்றும் 63பேர் உதிரம் வழங்கினர் என்றும் இந்து இளைஞர் மன்ற பிரமுகர் பியந்த தெரிவித்தார்.

## காத்தான்குடி மஃஹதுஸ்ஸுன்னா அந்நபவிய்யா மகளிர் அரபுக் கல்லூரியின் இரண்டாவது பட்டமளிப்பு விழா






(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

காத்தான்குடி மஃஹதுஸ்ஸுன்னா அந்நபவிய்யா மகளிர் அரபுக் கல்லூரியின் இரண்டாவது பட்டமளிப்பு விழா (27) சனிக்கிழமை காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் நடைபெற்றது.

காத்தான்குடி மஃஹதுஸ்ஸுன்னா அந்நபவிய்யா மகளிர் அரபுக் கல்லூரியின் தலைவர் அஷ்ஷெய்ஹ் எம்.சி.எம்.ரிஸ்வான் மதனி தலைமையில் நடைபெற்றது

இந்த பட்டமளிப்பு விழாவில் மருதமுனை தாறுஸ் குதா பெண்கள் அரபுக்கல்லூரியின் அதிபர் கலாநிதி எம்.எல்.முபாரக் மதனி, அஷ்ஷெய்ஹ் எஸ்.எச்.இஸ்மாயில் சலபி, ஜம் இய்யத்துஸ் சபாப் நிறுவனத்தின் தலைவர் அஷ்ஷெய்ஹ் எம்.எஸ்.எம்.தாஸீம், அஷ்ஷெய்ஹ் லாபீர் அஜ்வத் மதனி கல்லூரியின் அதிபர் எம்.ஏ.சி.எம்.செயினுலாப்தீன் உட்பட கல்லூரி விரிவுரையாளர்கள் நிருவாகிகள் பிரமுகர்கள் உலமாக்கள் முக்கியஸ்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது கடந்த ஐந்து வருடங்களில் இங்கு கல்வியை முடித்த 125 பேருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டன. இந்த விழாவில் சிறப்புரையை அஷ்ஷெய்ஹ் எஸ்.எச்.இஸ்மாயில் சலபி நிகழ்த்தினார்.



அட்டாளைச்சேனை தேசிய கல்வியியற் கல்லூரியின் புதிய பதிவாளராக எம்.ஜிப்ரி தனது கடமையினை நேற்று(29)திங்கட்கிழமை பொறுப்பேற்றுக் கொண்டார். கல்லூரியன் பீடாதிபதி சட்டத்தரணி கே. புண்ணியமூர்த்தி தலைமையில் இடம் பெற்ற புதிய பதிவாளரை வரவேற்கும் நிகழ்வின்போது கல்லூரியின் நிதி மற்றும் நிருவாகத்திற்கான உப பீடாதிபதி எம்.சீ.ஜுனைட், முன்னாள் பதிவாளர் ஏ.புஷ்பராஜ், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எம்.எம். அக்பர் சலீம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

(படம்: எம்.ஏ.றமீஸ்)

## ஆறுமுகம் தொண்டமானின் நினைவாக முத்திரையும் கடித உறையும் வெளியீடு

(வாஸ் கூஞ்ஞ)

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் பொது செயலாளருமான ஆறுமுகம் தொண்டமானின் நினைவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் விஷேட நினைவு முத்திரை மற்றும் கடித உறை என்பன திங்கள் கிழமை (29) ஜனாதிபதி அலுவலகத்தில் வெளியிடப்பட்டது.

வெகுசன ஊடகம் மற்றும் போக்குவரத்து அமைச்சர் பந்துல்ல குணவர்தனவினால் நினைவு முத்திரையும் கடித உறையும் ஜனாதிபதிக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது பிரதமர் தினேஷ் குணவர்தன , சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன . முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ . முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய , தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் ஆர்.சம்பந்தன் மற்றும் ஆறுமுகம் தொண்டமானின் மனைவி திருமதி ராஜலட்சுமி தொண்டமான் ஆகியோருக்கும் நினைவு முத்திரையும் கடித உறையும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் தொண்டமானின் குடும்பத்தினர் . தபால் மா அதிபர் மற்றும் முக்கிய அரசியல் தலைவர்களும் பலர் கலந்து கொண்டனர்.



## 35 வருட கல்வி சேவையிலிருந்து வரதன் இன்று ஓய்வு!

(வி.ரி. சகாதேவராஜா)

கல்வி சேவையில் 35 வருடங்களைப் பூர்த்தி செய்த பட்டிருப்பு வலய ஆரம்பக்கல்வி உதவி கல்விப் பணிப்பாளர் பாலசுந்தரம் வரதராஜன் இன்று (30) செவ்வாய்க்கிழமை சேவையிலிருந்து ஓய்வு பெறுகிறார் .

வெல்லாவெளியைச் சேர்ந்த வரதராஜன் 1988இல் ஆசிரியராக நியமனம் பெற்றார். பட்டதாரியாக முதுகல்விமாணி பட்டதாரியாக வாண்மை விருத்தியை மேற்கொண்டு பட்டிருப்பு வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றி வந்தார். மேலும் முதலுதவி பயிற்றுவிப்பாளராகவும் குடும்ப நல ஆலோசகராகவும் சேவையாற்றி வந்தார்.

ஆரம்ப இடைநிலை கல்வியை வெல்லாவெளி கலைமகள் வித்தியாலயத்திலும் , உயர் கல்வியை பட்டிருப்பு மகா வித்தியாலயத்திலும் கற்றிருந்தார்.

இன்னும் இரண்டு வருட காலம் ஒய்வுக்காக இருக்கையில் அவர் 58 வயதில் இன்று ஓய்வு பெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



# சந்ததி மறவாச் சரித்திரம்:
# 1981 ஜீன் 1 நெருப்பினில்
# கருகிய யாழ் நூலகம்!






தமிழ் மக்களின் அரிய சொத்தாக யாழ் நூலகம் விளங்கியது. தமிழ் வாசகர்களும், ஆராய்ச்சி அறிஞர்களும் நாடிச் செல்லும் ஒரு கேந்திர நிலையமாக அது அமைந்தது. தமிழ் மக்களின் தேசிய மேம்பாட்டின் அடையாளமாகவே யாழ் நூலகம் விளங்கியது. தமிழர்மேல் எழுந்த ஆத்திரம், பகைமை, எரிச்சல் அவர்களுடைய சொந்த நூலகத்தின் மேலே அரச பயங்கர வாதத்தால் இந்நூலகம் தீக்கிரையானது. இவ்வாறான பண்பாட்டு மையங்களை அழித்து இன்னோர் இனத்தின் எரிச்சலுக்கும் பகைமைக்கும் கொடுமைக்கும் காலாயுள்ள கருத்தோட்டங்களைப் பேரினவாதத்தின் உச்சக்கட்டம் என்றே குறிப்பிடுவர்.

பெரும்பான்மையான ஓர்இனம் சிறுபான்மையினரை ஒடுக்கும் சிறுமையை நோக்கிய அவமானச் செயலாக இந்நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. தென்னாசியாவிலேயே அதிக நூல்களைக் கொண்ட சுமார் ஒரு லட்சம் புத்தகங்கள், சுவடிகளைக் கொண்ட அழகிய நூல்நிலையம் சிங்களப் பேரினவாதிகளால் எரிக்கப்பட்ட இச்சம்பவம் தமிழ்இன அழிப்பு என்ற சிங்கள இனவாதிகளின் மன எண்ணத்தை உலகிற்கே வெளிப்படுத்தியது



எனலாம். தமிழ்மக்களின் பண்பாட்டு அறிவுப்பெட்டகமாகவும், அணையாத அறிவாலயமாக மிளிர்ந்த யாழ் நூலகம் ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் இளம் சீடர் காமினி திசாநாயக்கவின் மேற்பார்வையில் அரச பயங்கரவாத உச்சத்தில் 1981 ஜீன் 1 ஆம் திகதி தீ மூட்டி எரிக்கப்பட்ட கொடூர நாளாகும்.

சர்வாதிகாரி, கொடூர ஹிட்லர் கூட தன் படைகளுக்கு இட்ட கட்டளைகளில் ஒன்று நூல் நிலையங்களை அழிக்கக்கூடாது என்பதாகும். ஆனால் ஜெ.ஆரின் படைகள் அதனையும் விட்டு வைக்காமல் எங்கள் அணையாத அறிவாலயத்தை எரித்து, மாறாத வரலாற்று வடுவை தமிழ்மக்கள் மனதில் ஏற்படுத்தினர். அடக்குமுறை அரசுகளின் தொடர்ச்சியான 1958 ,19%% , 1883இல் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனக்கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும், அறிவியல், பண்பாட்டு நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன. இதன் தொடர்ச்சியாகவே



யாழ். நூலகமும் தீக்கிரையானது.

இச்செயல்கள் அனைத்தும் அரசின் திட்டமிடப்பட்ட செயலாகவே அமைந்தன. யாழ். எம்.பி.யின் வீடு, ஈழநாடு பத்திரிகை அலுவலகம், நகர வர்த்தக நிலையங்கள், ஆகியனவும் நாச்சிமார் கோவிலும் இக்கால வேளையிலேயே எரித்து நிர்மூலமாக்கப் பட்டன. இவ் எரிப்புகள் எல்லாவற்றிலும் மேலாக யாழ். நூலகம் எரிக்கப்பட்டதே தமிழ் பேசும் மக்களின் பாரிய இழப்பாகும்.

தென்கிழக்காசியாவில் முதன்மையாக விளங்கியது இப்பொதுசன நூலகம். மேலும் சர்வதேச நூலக மட்டங்களுடனும் யாழ் நூலகம் சிறப்பான நிலையிலிருந்தது. அச்சியந்திர சாதனங்கள் எழுமுன்பாக கையால் எழுதப்பட்ட சுவடிகள், பனையோலை வாசகங்கள் இப்படியாக தொல்பொருள் நிலையம் போன்ற யாழ் நூலகம் செயற்பட்டு வந்தது.

நூலக காங்கிரஸில் யாழ் நூலகம் அங்கத்துவம் வகித்தது. வரலாற்றுப் புகழ்வாய்ந்த யாழ் நூலகத்தின் மற்றோர் சிறப்பு அக்கட்டிடத்தின் சிற்ப அமைப்பே எனலாம். யாழ் நூலக கட்டிடம் தமிழரின் வரலாற்றுப் பொக்கிசமாகவே அனைவரையும் கவர்ந்தது. அக்காலத்தில் இந்த நூல்நிலையம் எரிக்கப்பட்ட செய்தியை முற்றாக இருட்டடிப்புச்செய்ய ஜெ.ஆர். அரசாங்கம் முயற்சித்தது. இச் சம்பவத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட லயனல் பெர்னாண்டோ விசாரணைக்குழு ஒரு கோடி ரூபா நட்டஈடுவழங்குமாறு அரசாங்கத்தைப் பணித்தபோதும் நட்ட ஈட்டுத் தொகையாக ஒரு ரூபாவைக்கூட வழங்க ஜே.ஆர். அரசாங்கம் முன்வரவில்லை. பண்பாட்டுப் படுகொலையின் அதி உச்சமான இக்கொடூர நிகழ்வை அகிலம் பூராக வெளிப் படுத்தப்படல் வேண்டும். மனித வாழ்வியத்தின் இழுக்கேடாக நிகழ்ந்த கலாச்சாரப் படுகொலையான யாழ் நூலகத்தின் எரிப்பினை தமிழ் மக்கள் என்றும் நினைவு கூர்ந்து கொள்வர். யாழ்நூலகம் எரிந்ததனை சந்ததி மறவாச் சரித்திரமாக வரலாற்றில் நிலைத்து நிற்கும்.

இந்நூல் நிலைய எரிப்பு மூலம் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மூட்டிய தீயின் வெம்மை இனவிடுதலைப் போராட்டத்திற்கு மேலும் உரமூட்டியது என்பதே உண்மை. இதற்காக மன்னிப்புக் கோரவோ நட்டஈடு வழங்கவோ கூட முன்வராத ஜெ.ஆர் ஜெயவர்த்தனவும் அவரது படைகளும் பின்னரும் பல நூலகங்களைச் சிதைத்தது கசப்பான வரலாறு தான்.



ஐங்கரன் விக்கினேஸ்வரா

## சொல்லத் துடிக்குது மனசு : 15

# மரபு, பாரம்பரியங்களை வேளிப்படுத்தும் வீட்டு நிகழ்வுகள்

*இல்லங்களில் நிகழும் பாரம்பரியங்களும் பல்வேறு சம்பிரதாயங்களும் நிறைந்த வாழ்வியல் அம்சங்களை வெளிப்படுத்தும் பல்வகை நிகழ்வுகளும் உள்ளன*

இந்துக்கள் குடும்பத்தைப் பண்பாடு, பாரம்பரியத்தின் அடையாளமாகவும், தாம் வாழும் வீட்டினைக் கோயிலாகவும் மதிக்கின்றனர். அதனால் தமது மரபு, சம்பிரதாயம், சமயம், கலாசாரம், பாரம்பரியம் சார்ந்த பல நிகழ்வுகளை தாம் வாழும் வீட்டை மையப்படுத்தி மேற்கொள்கின்றனர். இந்நிகழ்வுகளும் கூட அவரவர் சாதி, மதம், குலம், கோத்திர சம்பிரதாயங்கள் என்பவற்றுக்கு அமைவாகவும், பிரதேசத்துக்குப் பிரதேசம் சிலவற்றில் சிறு மாற்றங்களுடனும் நிறைவேற்றப்படுகின்றன. மட்டக்களப்பு மாவட்ட இந்துக்களின் வீடுகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் இறை வழிபாடு, சமய, கலாசார ஆச்சாரங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். வீடு கட்டுதல், தைப்பொங்கல், புதிரெடுத்தல், புதிர் உண்ணுதல், சித்திரைப் புத்தாண்டு, சர்க்கரை அமுது கொடுத்தல், ஆதிவைரவர் சடங்கு, தண்ணீர்ச் சோற்றுப் பள்ளயம், ஆடிப் பூரணை அமுது, பிதிர் வழிபாடு, ஆண்டமுது வைத்தல், கார்த்திகை விளக்கீடு, திருமண நிகழ்வுகள், பிறப்புடன் தொடர்புடைய நிகழ்வுகள், பருவமெய்தலோடு தொடர்புடைய நிகழ்வுகள், மரணச் சடங்கு நிகழ்வுகள் எனப் பலவற்றைக் குறிப்பிடலாம். இவற்றுள் பல நிகழ்வுகள், சடங்குகள் பற்றி முன்னைய கட்டுரைகளில் விளக்கப்பட்டுள்ளன.

இந்துக்களின் வாழ்க்கைக்கான அடையாளமாகவும் கோயிலாகவும் வீடுகளை மதிப்பதனால் வீடு கட்டுவதைச் சமய, சம்பிரதாயங்களோடு தொடர்புபடுத்தி மேற்கொள்கின்றனர். நாள் பார்த்தல், நிலையம் எடுத்தல், கால் நாட்டுதல் அல்லது கல் வைத்தல், முகட்டு[மோட்டு] வளை வைத்தல், கதவு நிலை வைத்தல், கிடுகு கட்டுதல் அல்லது ஓடு போடுதல், குடிபுகுதல், விளக்கு மறைத்தல் ஆகிய நிகழ்வுகள் ஒன்றன்பின் ஒன்றாக நடந்து கொண்டிருக்கும். பெரும்பாலான வீடுகளைக் கிழக்கு முகம் பார்த்தவாறு கட்டுவார்கள். தவிர்க்க முடியாத சந்தர்ப்பத்தில் மாத்திரமே தெற்கு, மேற்கு முகம் பார்த்தவாறு கட்டுவார்கள். வடக்கு முகம் பார்த்துக் கட்டுவதைப் பெரும்பாலும் தவிர்த்துக் கொள்வார்கள். முன்பு அமைக்கப்படும் வீடுகளுக்கு வெளியில் சமையலறை, மலசலகூடம் ஆகியவற்றை முறைப்படி அமைத்துக் கொள்வார்கள். தற்காலத்தில் காணியின் நீளம், அகலத்துக்கேற்ப மனையடி சாத்திரத்தின்படி சகலதும் வீட்டுக்குள் அமையத்தக்கவாறு நிலையம் எடுத்து அதன் நீளம், அகலம், ஈசான மூலை [ஆச்சாரமானது], அக்கினி மூலை[சமையலறை], நிருதி மூலை[பிரதான படுக்கை அறை], வாயு மூலை [மலசலகூடம்] வரத்தக்கதாக அமைத்துக் கட்டுவார்கள்.

ஒவ்வொரு நிகழ்வுகளையும் பஞ்சாங்கம் பார்த்துச் சுபவேளையில் ஆரம்பிப்பார்கள். மாசி, வைகாசி, ஆவணி, கார்த்திகை மாதங்களில் வரும் திங்கள், புதன், வியாழன், வெள்ளி, சனி ஆகிய தினங்களில் சுபவேளை தீர்மானிக்கப்படும். அத்தோடு நச்சத்திரம், ராசி, யோகம், கரணம், திதி, இராகு காலம் தொடர்பாகவும் கவனமெடுத்துச் சுபமுகூர்த்தத்தில் கருமங்களை ஆரம்பிப்பார்கள்.

இலங்கையில் தமிழ் இந்துக்கள் வீடுகளில் கொண்டாடப்படும் பண்டிகைகளில் பிரதானமான ஒன்றாகத் தைப்பொங்கல் பண்டிகை கொள்ளப்படுகிறது. தமிழ்நாட்டிலும் இலங்கையிலும் இந்துக்கள் இதற்கு முக்கியத்துவம் கொடுத்துக் கொண்டாடுகின்றனர். ஆங்கில வருடத்தில் இந்துக்களுக்கு வரும் முதலாவது பண்டிகையாகவும் கொள்ளப்படுகிறது. இப்பொங்கலைப் பசுப்பால அல்லது எருமைப்பால் அல்லது தேங்காய்ப்பால் கொண்டு பொங்கிச் சூரியனுக்குப் படைப்பார்கள். அத்தோடு அக்காலத்தில் விளைந்த சோளம், பனங்கிழங்கு, மரவள்ளி, சிறுகிழங்கு ஆகியவற்றையும் பொங்கல் படையலுடன் வைத்து வழிபடுவார்கள். மார்கழி மாதத்தை அடுத்து இப்பண்டிகை வருவதனால் பலரிடம் பணப் புழக்கம் குறைவாகவே இருக்கும். அதனால் பலர் புத்தாடை அணிந்து கொண்டாடுவதில்லை. இதனை அடுத்து நெல் அறுவடையும் ஆரம்பமாகிவிடும். அதனால்தான் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்கிறார்கள். தமிழ்நாட்டில் தைப்பொங்கலை அடுத்து வரும் நாளில் போகிப் பண்டிகை, மாட்டுப் பொங்கல் [பட்டிப் பொங்கல்] வைத்தும் கொண்டாடுகிறார்கள். இலங்கையில் இந்துக்கள் போகிப் பண்டிகை கொண்டாடுவதில்லை. தமது வாழ்க்கைக்குப் பல வழிகளிலும் துணையாக இருந்த மாடுகளைக் கௌரவிக்கும் முகமாகச் சிலர் தைப்பொங்கலை அடுத்து வரும் தினத்திலும், இன்னும் சிலர் தைப்பூசத்தன்றும் பட்டிப்பொங்கல் வைத்து வழிபடுகின்றனர்.



சோலையூர் குருபரன்



வயல் விழைந்ததும் சுபமூகூர்த்தம் பார்த்துக் கோயிலில் புதிரெடுக்கும் தினத்தில் அல்லது சுப வேளையில் புதிரெடுப்பார்கள். வயலுக்குச் சென்று நன்கு பழுத்த நெற்கதிர்களை ஒரு கைப்பிடி அளவு பிய்த்தெடுப்பார்கள். அதனைக் கொண்டுவந்து கடப்படியில் தொங்க விடுவார்கள். உரிய வேளை வந்ததும் சுவாமி அறையில் விளக்கு, நிறைகுடம், மடை வைத்து வழிபாடு செய்து, புது ஓலைப் பெட்டி ஒன்றில் பழைய நெல்லை நிரப்பி, அதன்மேல் வெற்றிலை, பாக்கு, பழம், நவதானியம், சில்லைறைக் காசு, பஞ்சலோகம் ஆகியன வைத்து வெள்ளைத் துணியால் பெட்டியை மூடி சுவாமி அறையில் வெள்ளைத் துணி விரித்து அதன்மேல் வைப்பார்கள். வீட்டுத் தலைவனும் தலைவியும் ஆச்சாரத்துடன் ஏற்றிய விளக்குத் திரியை ஒருவர் கொண்டு செல்ல, மற்றவர் தலைப்பாகை கட்டிப் பெட்டியைக் கொண்டு செல்வார். தலைப்பாகை கட்டியவரே கடப்படியில் தொங்க வைக்கப்பட்டிருக்கும் புதிய நெற்கதிரைப் பெட்டியுள் எடுத்து வைப்பார். இது பழைய நெல்லைக் கொண்டு சென்று புதிய நெல்லை எடுத்து வரும் நிகழ்வாகக் கொள்ளப்படுகிறது. நெற்கதிர் எடுத்து வந்த பெட்டியைக் கொண்டு வந்து சுவாமி அறையில் விரிக்கப்பட்ட வெள்ளையின்மேல் வைப்பார்கள். சில வீடுகளில் ஏனைய அறைகளிலும் நெற்கதிரைக் கொண்டுபோய் வைப்பார்கள். அதன் பின் பூசை, தேவார பாராயணத்துடன் புதிரெடுத்தல் நிகழ்வு நிறைவு பெறும்.

புதிர் எடுத்த சில நாட்களின் பின்னர் நல்ல நாள் பார்த்து வயல் அறுவடை செய்து புது நெல் வீட்டுக்குக் கொண்டு வருவார்கள். அன்றைய தினமே கோயிலிலும் புது நெல் கொண்டு போய்க் கொடுப்பார்கள். பஞ்சாங்கத்தில் சுபமுகூர்த்தம் பார்த்து விவசாயம் செய்யாதவர்களுக்கு கோயிலில் புதிர் நெல் கொடுப்பார்கள். அன்றையச கோயிலில் புதிர் சாப்பிடும் தினமும் அறிவிக்கப்படும். புது நெல்லைக் காயவைத்துக் கையினால் குற்றிச் சுத்தப்படுத்தி எடுப்பார்கள். கோயிலில் குறிப்பிட்ட தினம் அல்லது பிறிதொரு சுபவேளையில் சுவையான பொங்கல் செய்து, சுவாமி அறையில் நிறைகுடமும் விநாயகருக்கு மடையும் வைத்து பொங்கல் படைக்கப்படும். அத்தோடு அரிசிமா கூள், தயிரும் படைப்பார்கள். அருகில் பாய் விரித்து, வீட்டிலுள்ள அங்கத்தவர்கள் எல்லோருக்கும் இலை போட்டுப் பொங்கல், தயிர், கூள், உரித்த வாழைப் பழம் எல்லாவற்றையும் படையலில் வைப்பார்கள். தேவார பாராயணம் செய்து வழிபாடு முடிந்ததும் சகலரும் புதிர் உண்ணுவார்கள். அதன்பின்னர் விருந்தினர்களை உபசரித்து மகிழ்வார்கள். சில இடங்களில் அன்றைய தினம் பிதிரர்களையும் நினைவு கூருவார்கள்.

மட்க்களப்பு மாவட்டத்தில் இந்துக்களின் வீடுகளில் மேற்கொள்ளப்படும் சமய, கலாசார நிகழ்வுகள் ஒவ்வொன்றும் அர்த்தம் சார்ந்தவையாக இருக்கும். அதேபோலவே வீடுகளில் நடக்கும் ஆடிப் பூரணை அமுதும் கொள்ளப்படுகிறது. ஆடி மாதத்தில் கதிர்காம யாத்திரை செல்வோர் எல்லோரும் திரும்பி வீடு சேருவார்கள் என்ற நம்பிக்கை இல்லாத காலம். அக்காலத்தில் வீட்டிலிருந்து கதிர்காம யாத்திரை சென்றவர் வீடு சேரும் வரையும் வீட்டில் முருக வழிபாடு செய்வார்கள். அவர்கள் திரும்பி வந்ததும் ஆடிப் பூரணை [ஆடி வேல்] அன்று வீட்டில் பொங்கல் வைத்து வழிபடுவார்கள். ஆடிப் பூரணை அமுது கதிர்காம யாத்திரை செல்லாத சில வீடுகளிலும் நடைபெற்றதையும் கண்டிருக்கிறோம். இவ்வழிபாடு அண்மைக் காலங்களில் விடுபட்டுச் சென்று கொண்டு இருப்பதையும் காணலாம்.

பிதிர் வழிபாடுகளில் ஒன்றான ஆண்டமுது கொடுத்தல் நிகழ்வு இன்றும் வழக்கில் உள்ளதைக் காணலாம். ஒவ்வொரு ஆண்டிலும் பிதிரர் இறந்த தினத்தை அண்மித்துவரும் திதியை மையமாகக் கொண்டு அண்டமுது கொடுப்பார்கள். சில இடங்களில் பிதிரர் இறந்த ஆண்டு மாதத்தில் வரும் குறித்த திகதியில் ஆண்டமுது கொடுப்பார்கள். பிதிர் வழிபாட்டுக்குப் படையல் வைப்பது போல் படையல் வைத்து வழிபடுவார்கள். இன்னும் சில இடங்களில் குறித்த ஆத்மாவுக்கு மாத்திரம் படையல் வைத்து வழிபடுவதையும் கண்டிருக்கிறோம். வசதி படைத்தவர்கள் ஆரிய, வேத, ஆகம முறைப்படி குருக்களைக் கொண்டு கிரியை நடாத்தி ஆண்டமுது கொடுப்பதையும் காணலாம். ஐயர் நமது விருப்பத்துக்கு அல்லாமல் ஆகம விதி முறைப்படியே கிரியை செய்து, சங்கூதி வழிபாட்டை நிறைவு செய்வார். சில இடங்களில் அழைப்பிதழ் கொடுத்துத் திருமண வீடு போல் ஆண்டமுது விருந்துபசாரம் கொடுப்பதையும் கண்டிருக்கிறோம். ஆண்டமுதினை நமது மூதாதையர் செய்த முறைப்படி கொடுப்பதே சிறந்தது.

ஒரு பெண் திருமணமாகிக் கர்ப்பமானது முதல் வீட்டில் உள்ளவர்களும் உறவினரும் சுற்றத்தாரும் மகிழ்ச்சியைக் கொண்டாடுவார்கள். பிள்ளை பிறக்கும் வரையும் கொழுக்கட்டை, பாற்பொங்கல், அப்பம், வாழைப்பழம் ஆகியவற்றை உறவினரும், சுற்றத்தாரும் கற்பவதிக்குக் கொண்டுவந்து கொடுப்பார்கள். அத்தோடு மருத்துவிச்சி, பூசாரி, பரிகாரி ஆகியோர் அடிக்கடி வந்து பார்த்துப் பரீசோதித்துப் போவார்கள். அப்போதெல்லாம் பெரும்பாலான சுகப்பிரசவங்கள் தங்கள் தங்கள் வீடுகளில் இவர்களின் கண்காணிப்பில் நடைபெறும். பிள்ளை பிறந்ததும் ஆண்பிள்ளையாயின் தாய்மாமன் உலக்கையினால் வீட்டின் கூரையில் தட்டி முன்பக்கமாக நின்று வீட்டின் மேலாகப் பின்பக்கம் நோக்கி வீசுவார். பிறந்தது பெண் பிள்ளையாயின் மாமியார் விளக்குமாற்றை எடுத்து வீட்டின் முன்பக்கம் நின்று வீட்டின் மேலாகப் பின்பக்கம் நோக்கி வீசுவார். இந்நிகழ்வு என்ன பிள்ளை பிறந்திருக்கிறது என்பதை வீட்டுக்கு வெளியே அமர்ந்திருக்கும் உறவினர்களுக்குத் தெரியப்படுத்துவதாக அமையும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பிள்ளை பிறப்புடன் தொடர்புடைய நிகழ்வுகளாகப் பிள்ளை பிறந்து பன்னிரெண்டாம் நாள், முப்பத்தோராம் நாள் மருங்கை, முடி வழித்தல், தொட்டிலில் இடல், காது குத்துதல். அரைஞாண் கயிறு [அறணாக்கொடி] கட்டுதல் பிறந்தநாள் கொண்டாடுதல் ஆகிய நிகழ்வுகள் பிரதானமாக நடைபெறும். பிள்ளை பிறந்ததும் குருதியும் பாலும் சுரப்பதற்காகவும் உடல் தெம்புக்காகவும் விசேடமாகத் தயாரிக்கப்பட்ட காயம் எனப்படும் உணவினைத் தேனுடன் கலந்து கொடுப்பார்கள். ஆரம்பத்தில் மிளகுத் தண்ணீர் எனப்படும் பத்தியக் கறியும், மூன்றாம் நாளில் இருந்து மதிய போசனமும், ஏழாம் நாளில் இருந்து இராப் போசனமும் கொடுக்கத் தொடங்குவார்கள். பன்னிரெண்டாம் நாள் மருத்துவிச்சி, கட்டாடி ஆகியோரைக் கௌரவிப்பார்கள். அவர்களுக்கு தட்சனைகள்[மருத்துவிச்சி- சோற்றுப் பெட்டி, மூன்று மரைக்கல் நெல், சேலை, பணம் ஆகியனவும், கட்டாடிக்கு சோற்றுப் பெட்டி, படியாக ஏழு மரைக்கால் நெல்] கொடுப்பார்கள். முப்பத்தோராம் நாள் மிக முக்கியமான நாளாகவும், தீட்டுத் தொடக்கு விடுபடும் நாளாகவும் கொள்ளப்படும். இதனை மருங்கை என்றும் அழைப்பர். அன்றைய தினம் தலைமுடி வழித்தல், காது குத்துதல், தொட்டிலில் இடல், நகை அணிதல், அரைஞாண் கயிறு கட்டல் ஆகிய நிகழ்வுகளுடன் தமது தகுதிக்குத் தக்கபடி பூசாரி, பரிகாரி, மருத்துவிச்சி, கொழுக்கட்டை, அப்பம், பாற்பொங்கல், வாழைப்பழம் கொண்டு வந்தோர், உறவினர்கள் ஆகியோர் அழைக்கப்பட்டு விருந்து கொடுப்பார்கள்.

ஒரு பெண் பருவமடைதல் என்பது உடல் ரீதியான மாற்றமாகும். பருவமடைந்த பின்னர் அவர் இனப் பெருக்கத்துக்குத் தயாராகின்றார் என்பது அர்த்தமாகும். இதனைப் பூப்படைதல், ருதுவாதல், சாமத்தியப்படல், பெரிய பிள்ளையாதல், புத்தியறிதல், சமைதல் என்றவாறெல்லாம் அழைக்கின்றனர். பெண்ணுக்கு ஏற்படும் மாதவிலக்கினை வீட்டுக்குத் தூரம், மாதவிடாய், தீட்டு, துடக்கு எனவும் அழைப்பர். முதலாவது மாதவிலக்கு ஏற்பட்டதும் சோதிடரைச் சந்தித்து முதலாவது தண்ணீர் [கண்ட தண்ணீர்] ஊற்றுவதற்குரிய சுபவேளையையும் குறிப்பையும் எழுதிக் கொள்வார்கள். இதனை உறவினர்களுக்கும், கட்டாடிக்கும் தெரியப்படுத்துவார்கள். கட்டாடி [சலவைத் தொழிலாளி] தண்ணீர் ஊற்றுவதற்குரிய இடத்தினைச் சீலை கட்டி மறைத்து விடுவதோடு, கூரையில் வெள்ளைத் துணி கட்டி அடையாளப்படுத்துவார். குறித்த நேரத்தில் குரவை, பட்டாசிச் சத்தம் முழங்கத் தண்ணீர் ஊற்றப்படும். தண்ணீர் ஊற்றியதும் வயது முதிர்ந்த பெண்கள் புத்தாடை அணிந்து அவருக்கென ஒதுக்கப்பட்ட இடத்தில்[அறையில்] இருத்துவார்கள். தீவிர தீட்டுக் காலமாகிய முதல் பன்னிரு நாளும் தினமும் மஞ்சள் பூசி, நீராட்டி உடை மாற்றுவார்கள். இக்காலப் பகுதியில் பத்தியமான சாப்பாடு கொடுக்கப்படும். மீன், இறைச்சி, உப்பு, காரம், ஒவ்வாமைக்குரிய உணவு, அதிக புளிப்புக் கலந்த உணவுகளைக் கொடுக்கமாட்டார்கள். பச்சை முட்டை, எள்ளு, நல்லெண்ணெய், கத்தரிப் பிஞசு, முருங்கை இலை, ஊளுந்துக்களி ஆகியன பிரதான உணவாகக் கொடுப்பார்கள்.

பூப்படைந்த பெண்ணை முப்பத்தோராம் நாள்வரை வயது முதிர்ந்த பெண்கள் பராமரிப்பார்கள். அந்நாள்வரை உறவுப் பெண்கள் முட்டை, அவித்தெடுத்த பிட்டு, இடியப்பம், கொழுக்கட்டை  மஞசள், எள்ளு, நல்லெண்ணெய் என்பவற்றுடன் அடிக்கடி வந்து செல்வார்கள். அத்தனை நாளும் மகிழ்ச்சியுடன் உபசரிப்புக்களும் நடைபெறும். முப்பத்தொரு நாளும் தீட்டுக் காலமாக இருக்கும். முப்பத்தோராம் நாளைப் 'பிட்டுக்களி செலவு நாள்' பூப்பு நீராட்டுவிழா, ருதுசாந்தி விழா, மஞ்சள் நீராட்ட விழா, பூப்புனித நீராட்டுவிழா எனவும் அழைத்தனர். அந்நாளில் பிள்ளைக்கு அரப்பு வைத்து நீராட்டி அலங்கரித்து ஆலத்தி எடுப்பார்கள். பிள்ளையை அமரச் செய்து பிள்ளையைச் சுற்றி நிறைகுடம், வட்டாமடை, வட்டி, அரிசிப் பெட்டி, நெற்கடகம் ஆகியன வைத்துக் கட்டாடிக்குக் கொடுப்பார்கள். பூப்படைந்த பெண்ணுக்குப் பலவகைப்பட்ட பரிசில்கள் கொடுத்துக் கௌரவித்தனர். சில இடங்களில் இதனைப் பெரிய விழாவாகவும் எடுப்பர். இன்னும்சில இடங்களில் மஞ்சள் நீராட்ட விழாவுக்குச் சுபமுகூர்த்தம் பார்த்து தமது வசதிக்கேற்ப பிறிதொரு தினத்தில் பெரிய விழாவாகவும் எடுக்கின்றர்.

அறுபது வருடங்களக்கு முன்னர் ஆண்களுக்கு முதல் முதலாக முகத்து மயிர் வழித்தல் நாளை ஆண்கள் பருவமடைந்த நாளாகக் கொண்டாடினர். சிறுவனாக இருக்கும் போது காதில் அணிந்திருந்த சிமிக்கிளைக் கழட்டிப் பரவமெய்தியதன் அடையாளமாகக காதில் கடுக்கண் அணிவிப்பார்கள். அதுநாள்வரைத் தலையில் கட்டி வந்த கன்னத்துக் குடுமியை அவழ்த்துப் பின் குடுமியாகக் கட்டி விடுவார்கள். அத்தோடு அதுவரை கழுத்தில் அணிந்து வந்த காறை எனப்படும் கழுத்து ஆபரணத்தையும் கழட்டி விடுவார்கள். இந்நடைமுறை மட்டக்களப்பு மாட்டத்தில் இருந்து மறைந்து விட்டதென்றே கூறலாம்.




இதுவரை எழுதப்பட்ட பதினைந்து கட்டுரைகளில் மட்டக்களப்பு மாவட்டதில் பல பிரதேசங்களில் வீட்டுடன் சம்பந்தப்பட்ட விழாக்கள், நிகழ்வுகள், கொண்டாட்டங்கள் ஆகியன ஓர் ஆவணப்படுத்தலாக முன்வைக்கப்பட்டன. இது ஓர் ஆரம்ப முயற்சி. இருந்தும் பல சந்தேகங்கள் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. சில முரண்பாடுகளும் முடிந்தவரை கழையப்பட்டு விளக்கப்பட்டிருக்கின்றன. இவை தொடர்பான ஆளமான தேடலுக்கு இக்கட்டுரைகள் ஓர் துணை ஆவணமாக அமையும்.

*பண்பாடு பழக்க வழக்கம் என்று பண்பட்டு வாழ்ந்த நம் தமிழ் மக்கள் பண்பாட்டை மறந்து சீர்கெட்டுச் செல்வதைப் பண்படுத்தும் வகையில் வாழ்வியல் அம்சங்களைத் தொட்டுத் தொடர இருக்கிறேன்.*

தொடரும்....











# லண்டனிலிருந்து விமல் நூல் வேளியீட்டுவிழா

(அஸ்ரப் ஏ சமட் )

லண்டன் பீ.பி.சி. அறிவிப்பாளர் அந்த நாட்டில் வழக்கறிஞராகவும் கடமையாற்றி வருகின்ற திரு.விமல் சொக்கநாதன்.

அவர் இலண்டனிலிருந்து வீரகேசரி வார வெளியீட்டுப் பத்திரிகைக்கு எழுதிய %5 கட்டுரைகள் நூலக்கப் பட்டு கொழும்பு தமிழ் சங்கத்திலும் கடந்த 2%.05.2023 அன்று வெளியிட்டு வைக்கப்பட்டது..

இலங்கையிலும் அவர் இலங்கை வானொலியிலும் அவர் அறிவிபபாளராகவும் சட்டத்தரனியாகவும் கடமையாற்றினார்.

இந் நூல் வெளியீட்டு நிகழ்வுக்கு சட்டத்தரணிசபாரத்தினம் தலைமையில் நடைபெற்றது.

அதிதிகளாக வீரகேசரி முகாமைத்துவ பணிப்பாளர் குமார் நடேசன், பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், மனோ கனேசன், சீரேஷ்ட ஊடகவியலாளர் ஆனந்த பாலக்கிட்டனர், உலக அறிவிப்பாளர் பி.எச்.அப்துல் ஹமீட், பீபீ.சி அறிவிப்பாளர். சிவா, வீரகேசரி ஆசிரியர் ஸ்ரீ கஜன், உமா சந்திராபிரகாஷ்,

ஆசியுரை - கொழும்பு இராமகிருஷ்ன மிஷன் தலைவர் பூஜ்யஸ்ரீ அட்சராத்மானந்தஜ் மஹராஜ

நூலின் முதற்பிரதி வீரகேசரி நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் குமார் நடேசன் நூலாசிரியரிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

# திருமலை பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த வைகாசிப் போங்கல் விழா







(அ .அச்சுதன்)

திருகோணமலை அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் நிகழ்வு இன்று 29ம் திகதி திங்கட்கிழமை மாலை 3.00 க்கு பிரதான வளந்து பொங்கல் பூஜைகள் இடம்பெற்றது. இதன் போது ஆலய பிரதம குரு வேதாகாமமாணி சோ.இரவிச்சந்திரக்குருக்களால் கிரியை நிகழ்வு இடம் பெறுவதையும் பக்தர்கள் நேர்த்திக்கடன் செலுத்துவதையும் காணலாம்.

# அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமாவின் புதிய நிர்வாகம்



(ஏயெஸ் மௌலானா)

அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபையின் நடப்பாண்டுக்கான நிர்வாகத் தெரிவுக் கூட்டம் அதன் தலைவர் அஷ்ஷெய்க் எஸ்.எச். ஆதம்பாவா மதனி தலைமையில் ஞாயிற்றுக் கிழமை (28) மாலை சாய்ந்தமருது ஜ ூம்ஆப் பெரிய பள்ளிவாசலில் நடைபெற்றது.

இதன்போது சபையின் புதிய தலைவராக அஷ்ஷெய்க் ஐ.எல். எம். ஹாஷிம் அஷ்ஷ ூரி தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

செயலாளராக மீண்டும் அஷ்ஷெய்க் ஏ.எல்.நாசிர்கனி ஹாமி தெரிவானதுடன் பொருளாளராக அஷ்ஷெய்க் இஸட்.எம்.நதீர், உப தலைவர்களாக அஷ்ஷெய்க் எம்.ஐ.ஜஹ்பர் பலாஹி, அஷ்ஷெய்க் அன்சார் மௌலானா நழீமி, உப செயலாளராக அஷ்ஷெய்க் எம்.எல்.பைஷல் காஷிபி ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

இவர்களுடன் 21 உலமாக்களைக் கொண்ட செயற்குழுவும் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 1998ஆம் ஆண்டு முதல் சுமார் 25 வருட காலம் அம்பாறை மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவராக பணியாற்றி வந்த அஷ்ஷெய்க் எஸ்.எச். ஆதம் பாவா மதனி இதன்போது ஓய்வு பெறுவதாக அறிவித்து பிரியாவிடை பெற்றுக் கொண்டார்.

# பாதயாத்திரையில் வந்த யாழ் யாத்திரீகர் மாமாங்கத்தில் திடீர் மரணம்!





( வி.ரி.சகாதேவராஜா)

யாழ்ப்பாணம் செல்வச் சந்நதியிலிருந்து கடந்த மாதம் ஆறாம் தேதி முதல் பாதயாத்திரையில் ஈடுபட்டு வந்த யாழ்ப்பாணம் யாத்திரீகர் ஒருவர் மட்டக்களப்பு மாமாங்கத்தில் திடீர் மரணமானார்.

இச் சம்பவம் நேற்று(29) திங்கட்கிழமை காலை 6:30 மணி அளவில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் கைதடியைச் சேர்ந்த கே. சிவலிங்கம் (வயது 70 ) என்பவரே இவ்வாறு திடீரென மரணமானவர்.

யாழ்ப்பாணம் செல்வச் சந்நதியிலிருந்து ஜெயாவேல்சாமி தலைமையில் 62 பேர் கொண்ட யாத்திரிகர்கள் கடந்த 23 நாட்களாக பாதயாத்திரையில் ஈடுபட்டு வந்தனர்.

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு மட்டக்களப்பு மாமாங்கத்தை வந்தடைந்த அவர்கள் நேற்று காலை அங்கிருந்து புறப்பட இருந்தசமயம் இந்த மரணம் சம்பவித்திருக்கின்றது.

மட்டக்களப்பு போலீசார் ஸ்தலத்திற்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டதுடன் மரணவிசாரணை அதிகாரியின் விசாரணையின் பின்னர் சடலத்தை மட்டக்களப்பு வைத்தியசாலைக்கு உடற்கூற்று பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர்.

இது தொடர்பாக பாதயாத்திரை குழுத் தலைவர் ஜெயா வேல்சாமி கூறுகையில்...

கடந்த ஏழு வருட காலமாக யாத்திரிகர் சிவலிங்கம் எங்களுடன் பயணித்து வருபவர். வழமை போல இன்று காலை மாமாங்க ஆலயத்தில் பஜனை முடித்த பிற்பாடு நாங்கள் பணிஸ் மற்றும் தேநீரை அருந்தி விட்டு புறப்பட இருந்த சமயம் சிவலிங்கம் துள்ளி குதித்தாடி சந்தோஷத்தில் இருந்தார்.

மறுகணம் அவர் மயக்கமுற்று சரிந்து விழுந்த உடனே நாங்கள் அம்புலன்ஸ்க்கும் 119க்கும் தகவல் கொடுத்தோம். அங்கிருந்து ம்புலன்ஸ் வருவதற்கு இடையில் அவரது உயிர் பிரிந்து விட்டது.

எனவே ம்புலன்ஸ் பிரேதத்தை ஏற்ற முடியாது என்று கூறி சென்றுவிட்டார்கள். பின்பு நாம் போலீசார் உடன் தொடர்பு கொண்டோம்.

போலீசார் மரணவிசாரணை அதிகாரி வந்து என்னையும் இன்னும் சிலரையும் விசாரணைக்குட் படுத்தினார்கள். அதன் பின்பு பிரேதம் கொண்டு செல்லப்பட்டது. இன்று பகல் கல்லடி ராமகிருஷ்ண மிஷினிலே எங்களுக்கு மதியபோசனமிருந்தது. இந்த வேளையிலே இந்த சம்பவ இடம்பெற்றது .எனது பாதயாத்திரை வரலாற்றில் பாதை யாத்திரையின் பொழுது ஒருவர் மரணித்த சம்பவம் இதுவாகத்தான் இருக்கின்றது. என்றார்.

# போருளாதார ரீதியில் சவாலை எதிர்நோக்கும் பேண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலருணவு போதிகள்

(தலவாக்கலை பி.கேதீஸ்)

இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளை மற்றும் ஸ்ரீ ஆறுமுக நாவலர் அறப்பணி ஊடாக சேவா அமெரிக்கா நிதியுதவியுடன் இந்து ஸ்வயம் சேவக சங்கத்தின் ஏற்பாட்டில் பொருளாதார ரீதியில் சவாலை எதிர்நோக்கும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கப்பட்டன.

ஹட்டன் பிரதேசத்தை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 240 குடும்பங்களுக்கு ஒரு குடும்பத்திற்கு தலா 25 கிலோ அரிசி 25 கிலோ மா என்ற அடிப்படையில் இப்பொதிகள் நேற்று ஹட்டன் ஸ்ரீ மாணிக்கப் பிள்ளையார் தேவஸ்தான மண்டபத்தில் வழங்கப்பட்டன.

இலங்கை சேவா சர்வதேச அறக்கட்டளையின் தலைவர் ஸ்ரீமான் இரா.விஜய பாலன்ஜி, இந்து ஸ்வயம் சேவக சங்க செயற்திட்ட இணைப்பாளர் சாந்தகுமார்ஜி ஆகியோர் உட்பட ஏனைய விசேட அதிதிகள் இப்பொதிகளை வழங்கி வைத்தனர்.



# கிழக்கின் பொத்துவில் பிரதேசத்தில் இறத்தல், மற்றும் பாணமை பிரதேசங்களும், பாலைப் பழமும் போதுமக்கள் நடந்து கோள்ள வேண்டிய விதங்களும்

இலங்கையில் பாலைப் பழத்துக்குப் பெயர் போன இடங்களாக கிழக்கு மாகாணத்தின் அம்பாரை மாவட்டத்தில் பொத்துவில் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள இறத்தல், மற்றும் லாஹுகல பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பாணமை பகுதிகள் அடர் வனங்களாகும்.

இங்கு மே, ஜுன் மாதங்கள் முழுவதும் கடும் வெப்பநிலை நிலவும் காலமாகவும், இக்காலப்பகுதியிலேயே அதிகமான பழங்கள் கனிந்து சுவை தருவனவாகவும் காணப்படுகின்றன.

குறிப்பாக, இக்காடுகளில் மிக அதிகளவாக பாலை மரங்கள் வளர்ந்துள்ளன அவைகளில் கொடிப்பால, மரப்பால என்று இரண்டு வகைகள் காணப்படுகின்றன.

கொடிப்பாலை என்பது மரங்கள் உயரம் குறைந்தவையாகவும், அவற்றின் கிளைகள் நீளமாக படர்ந்து காணப்படும். மரப்பாலை என்பது அம்மரங்கள் உயர்ந்து வளர்ந்தும் காணப்படும். இவ்விரண்டும் ஒரு இலைக்கு ஒரு காயென்ற அடிப்படையில் காய்க்கும்.



காய்த்து சில வாரங்களிலேயே அவைகள் பழுக்கத் துவங்கும்.

பாலை பழம் காய்த்து பழுக்கும் காலத்தை ' பாலபழுத்திருக்கு' என்று மண்வளச் சொற் கொண்டு நம்மவர்கள் அழைப்பர். பாலைப் பழம் பழுத்துள்ள காலங்களில் காட்டுக்குச் சென்றால் மிகவும் ரம்மியமான மணம் காடு முழுவதும் வியாபித்துக் காணப்படும்

இக்காலங்களில் நகரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் குடும்பம் குடும்பமாகவும், நண்பர்கள் சகிதம் காடுகளுக்குச் சென்று பகல் உணவு சமைத்து சாப்பிட்ட பின்னர் மரங்களில் ஏறி பாலப்பழத்தை பறித்துச் சுவைப்பர் அதில் இன்பம் காண்பர்.

இக்காலங்களில் பாலை மரத்தை நோக்கி காட்டின் புதர்களில் மறைந்திருக்கும் கரடி பாலைப்பழத்தை உண்பதற்காக இம்மரங்களில் ஏறி இருக்கும். இம்மிருகமானது மிகவும் ஆபத்தானது. இது மனிதர்களை விரட்டுவதும் மனிதர்களை கடிப்பதும் உண்டு. இப்படியான சில பல சம்பவங்கள் அக்காடுகளில் நடந்துள்ளன.

ஒரு தடவை குமண சரணாலயத்துக்கு பாலப்பழம் பறிக்கப் போய் அந்த இன்பத்தில் மூழ்கியிருந்த வேளை ஒரு சிறுமியை கரடியும், சிறுத்தையும் விரட்டி மரத்தில் ஏற்றி கொன்று தின்ற துயர் சம்பவம் பதிவாகி இருந்திருக்கிறது.

காட்டுக்குள் பாலைப்பழம் பறித்துண்ணப் போகும் போது மக்கள் தமது, தங்களது குழந்தைகளின் பாதுகாப்பில் அதிக கவனம் எடுத்து நடந்து கொள்வது மிகவும் முக்கியமானது.

மட்டுமல்லாமல் இந்தப் பாலை மரங்களில் காட்டிலுள்ள விஷப் பாம்புகளும் குடியிருக்கும் என்பதனையும் நாம் கவனத்திற் கொள்வது ரொம்பவும் அவசியமானது.

# சோனகர் திருமணத்தில் தாலியும்! சீதனமும்!!



இஸ்லாமியத் திருமணத்தில் தாலிக்கும்,சீதனத்திற்கு எந்த வேலையும் கிடையாது,ஆனாலும் தாலியும்,சீதனமும் ஆட்சி செலுத்துகிறது!

ஶ்ரீலங்கா சோனகர்கள் எல்லாப் பகுதிகளிலும் தாலி கட்டுவதை பர்ளு ஐன்(கட்டாய கடமை) ஆக கொண்டுள்ளார்கள்,கிழக்கு சோனகர்கள் தாலியையும் சேர்த்து சீதனமாக வீட்டையும்,நகையையும்,ஏனைய சொத்துக்களையும் பெண்களிடம் பெறுவதை பர்ழ் ஐன்(கட்டாய கடமை)ஆக ஆக்கிக் கொண்டுள்ளனர்.

இந்த தாலியும்,சீதனமும் எந்தக் கலாசாரத்தில் இருந்து சோனகர்களுக்குள் புகுந்துள்ளது,நிச்சயமாக இது அரபுக் கலாசாரமோ,ஈரானிய ,மங்கோலிய (மொகல் )கலாசாரமோ கிடையாது,தமக்கு சொந்தமில்லாத ஒரு கலாச்சாரத்தை சோனகர்கள் ஒரு போதும்

பின்பற்றுவதற்கு எந்தச் சாத்தியமுமில்லை.

நிச்சயமாக தாலியும்,சீதனமாக பெண்களிடம் வீடு பெறுவதும் தமிழர்களின் கலாச்சாரம்,இந்த கலாசாரத்தை ஏன் சோனகர்கள் பின் தொடர்கிறார்கள்?வரலாற்றின் அடிப்படையில் ஶ்ரீலங்கா சோனகர்களின் தாய் வழியுறவு தமிழர்கள் என்பதில் எந்த சந்தேகமுமில்லை.சோனகர்களின் தாய் வழி வரலாறை அரபுக்களிடம் கொண்டு சென்று இணைக்கும் முயற்சியை சில வரலாற்று வறுமை உள்ளவர்கள் செய்கிறார்கள்.இவர்களின் இந்த அயோக்கியத்தனத்தை தாலியும்,சீதனமும் தெளிவாக முறியடிக்கிறது.

சோனகர்களின் கலாசாரத்தில் இருந்து அழிந்து போன தாய்மார்களின் புடவை,ஆண்களின் வேட்டி(கேரள முஸ்லிம் ஆண்களின் தேசிய உடை வேட்டியே)குடி முறை,திருமண சம்பிரதாயங்கள், போன்றவை தமிழர் கலாசாரத்தின் அங்கங்களாகும்!

ஏன் சோனகர்கள் தாலியையும்,சீதனத்தையும் கைவிடவில்லை?

தாய் வழியாக வந்த சோனக சமூகத்தில் இப்போதும் தாய்மார்களே ஆதிக்க சக்திகளாகும்.இந்த ஆதிக்கத்தை நபிகள் போதித்த எந்த இஸ்லாமிய மத போதனைகளாலும்,எந்த

கொம்பு முளைத்த உலமாக்களாலும் தகர்த்துவிட முடியாது,எல்லா உலமாக்களும்,பல்கலைக்கழக பட்டதாரிகளும்,கல்விமான்களும்,பிஸ்தா புத்திஜீவிகளும் ரஸூலுல்லாஹ்வின் போதனைக்கெதிராக தாலி கட்டிவிட்டு சீதனத்தையும் பெற்றுக் கொண்டே பெண்களை இன்றும் பொறுப்பெடுக்கின்றனர்.

ஒரு 2% திருமண சீர்திருத்தத்தை இப்போது சோனக சமூகத்தில் இளைஞர்கள் பின்பற்றுகிறார்கள்.ஒரு பத்து வருடங்களுக்கு முன்னர் காத்தான்குடியில் சில திருமண சீர்திருத்தத்தை செய்தனர் இதில் தாலியும்,சீதனமும் உலமாக்களால் தவிர்க்கப்பட்டு ரஸூலுல்லாஹ்வின் சுன்னத்(வழிமுறை)ஆக இருந்த மணமகனுக்கான நன்கொடை வழங்குதல் கறாம் என நிறுத்தப்பட்டது,இதுவே உலமாக்களின் தீவிர இஸ்லாமிய திருமண சீர்திருத்தமாகும்!

இஸ்லாமிய மத போதனையை விட வலிமையானது தமிழர் வழி வந்த கலாசாரம் என இப்போதைக்கு மனம் கொள்வோம்!

**நன்றி**
**Haaris Ali Uthuma**
**முகப்புத்தகத்திலிருந்து**

# மன்னார் பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில் பாரம்பரிய உணவுப் பண்டங்களே விற்பனையாக வேண்டும்

## அரச அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல்

( வாஸ் கூஞ்ஞ)

எமது முன்னோரின் பாராம்பரிய உணவு முறைகள் எமது கைநழுவிச் செல்லும் இக்காலத்தில் இது மறைந்து போகாமல் இருப்பதற்கு எதிர்கால சந்ததினருக்கு உணர்த்த பாடசாலை சிற்றுண்டிச் சாலைகளில் பாரம்பரிய உணவுகளையே விற்பனை செய்ய வேண்டும் என கல்விப் பணிப்பாளர்கள் அதிபர்களிடம் வேண்டுகோள் விட இருக்கின்றேன் என மன்னார் அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் இவ்வாறு தெரிவித்தார்.

அவுஸ்ரேலியா எயிட் நிதியுதவியுடன் மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பெண்களின் மரபுசார் உணவுக் கொண்டாட்டம் சனிக்கிழமை (27.05.2023) மன்னார் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றபோது முதன்மை விருந்தினராக கலந்துக் கொண்ட மன்னார் அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டிமெல் இங்கு தொடர்ந்து தனது உரையில் இங்கு வைக்கப்பட்டிருக்கும் பாரம்பரிய உணவுகளைப் பார்க்கின்றபோது இவைகள் எமது கண்ணுக்கும் காதுக்கும் நாவுக்கும் விருந்தளிக்கும் ஒரு உண்ணதமான நிகழ்வாகும்

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் இணைப்பாளர் மகாலட்சுமி



அவர்கள் தற்பொழுது பெண்களை உளரீதியாக வலுப்படுத்தலில் தனது கவனத்தை செலுத்தி வருகின்றார் என்பதை நான் நீண்ட நாட்களாக கவனித்து வருகின்றேன்.

அத்துடன் பெண்கள் சுயதொழிலில் தங்கள் காலில் நிற்க வேண்டும் என்ற ஒரு தூரநோக்குடன் செயல்பட்டு வருகின்றார்.

உடல் ஆரோக்கியமாக இருந்தால்தான் மனம் ஆரோக்கியமாக இருக்கும் என்ற சிந்தனையிலேயே அவரின் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

அன்மையில் இவ்வாறான நிகழ்வு இலுப்பைக்கடவையில் நடைபெற்றது. இன்று இது மன்னாரில் நடாத்தப்படுகின்றது.

இந்த நிகழ்வு காலத்துக்கு ஏற்ற ஒரு நிகழ்வாக இருக்கின்றது. உணவே மருந்து என்ற காலம் மாறி இப்பொழுது மருந்தே உணவு என்ற நிலையாக மாற்றம் அடைந்துள்ளது.

நாற்பது வயது கடந்து விட்டால் கட்டாயம் எமது உடலை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டும் என்பது இப்பொழுது வைத்தியர்களின் ஆலோசனைகள்.

ஏனென்றால் இன்றைய உணவு பழக்கமே இந்த நிலைக்கு தள்ளியுள்ளது. கொரோனா வந்த பின்பு தான் பலர் பாராம்பரிய மருந்துக்கு திரும்பினர் என்பது நாம் அறிவோம்.

தென் பகுதியில் காலையில் இலைக்கஞ்சி விற்கின்றார்கள். இங்கு மன்னாரில் இதற்கான பொருட்கள் இருக்கின்றன. ஆனால் இதை இங்கு செய்வதில் எவரும் அக்கறைக் கொள்வதில்லை.

எமது பகுதியில் உற்பத்தி செய்யப்படும் உடலுக்கு தீங்கு விளைவிக்காத உணவு மற்றும் பானங்கள் வெளிநாடுகளுக்குக் கொண்டு சென்று அங்குள்ள மக்கள் அதில் ஆர்வம் கொண்டு பாவிக்கின்றனர்.

ஆனால் நாம் அங்கிருந்து இங்கு வரும் உடலுக்கு கேடான பொருட்களையே வாங்கி பருகின்றோம் உண்ணுகின்றோம். இயற்கையாக கிடைக்கும் பொருட்களை நாம் விட்டுவிட்டு காசைக் கொடுத்து நோயை வாங்கும் சமூகமாகவே இருக்கின்றோம்.

இதை மாற்றும் நிகழ்வாகவே இந்த நிகழ்ச்சி அமைகின்றது. இதை நாம் மக்கள் மத்தியில் தொடர்ந்து கொண்டு செல்ல வேண்டும்.

எதிர்காலத்த்ணீல் இங்கு நடக்கும் நிகழ்வுகளில் சோடா பானங்கள் பரிமாறுவதை விட்டு இவ்வாறான உடலுக்கு நன்மை பயக்கும் பானங்களை பரிமாற வேண்டும் என்பதே எனது வேண்டுகோள்.

எமது முன்னோரின் பாரமபரிய உணவு முறைகள் எமது கைநழுவி செல்லுகின்ற வேளையில் இது மீண்டும் எழுச்சிப்பெற எதிர்கால சந்ததினருக்கு கொண்டுச் செல்லப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில் எமது பாரம்பரிய உணவு வகைகளையே விற்பனை செய்யப்படல் வேண்டும் என்று நான் வலயக் கல்விப் பனிப்பாளர்கள் அதிபர்களிடம் வேண்டுகோள் விட இருக்கின்றேன்.

இவ்வாறு இவை நடைமுறைக்கு வருமாகில் மாணவர்கள் ஆரோக்கியமான பிள்ளைகளாக வளரும் என்பது ஐயமில்லை.

இவ்வாறான நிகழ்வு எமது மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேசங்களுக்கும் கொண்டு செல்லப்பட வேண்டும் என இவ்வாறு கேட்டுக் கொண்டார்.

# மன்னாரில் பெண்களின் மரபுசார் உணவுக் கோண்டாட்டம்



( வாஸ் கூஞ்ஞ)

அவுஸ்ரேலியா எயிட் நிதியுதவியுடன் மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பெண்களின் மரபுசார் உணவுக் கொண்டாட்டம் சனிக்கிழமை (27.05.2023) மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம் பெற்றது.

இவ்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டிமெல் அவர்களும் சிறப்பு விருந்தினராக மன்னார் பிரதேச செயலாளர் மனோகரன் பிரதீப் அவர்களும் கலந்து கொண்டதுடன்

இவர்களுடன் மனித உரிமை செயற்பாட்டாளார் கமலா வாசுகி , பேராசிரியர் ஜெயசங்கர் மற்றும் முஸ்லீம் பெண்கள் நம்பிக்கை நிலையத்தின் இணைப்பாளர் யுவேரியா முகைதீன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பெண்களின் மரபுசார் உணவுகளை தயார் செய்து கொண்டுவந்த பாலியாறு . இலுப்பைக்கடவை , கட்டாளம்பிட்டி ,சவிரிக்குளம் , இத்திக்கண்டல் , வேட்டையான் முறிப்பு ஆகிய பெண்கள் அமைப்பினர் மற்றும் புத்தளத்திலிருந்து வருகை தந்திருந்த பெண்கள் அமைப்பினர் என பலர் இவ்நிகழ்வில் கலந்து கொண்டனர். மரபுசார் உணவு செய்கையில் வீட்டுத் தோட்டத்தில் ஈடுபட்ட தெரிவு செய்யப்பட்ட பெண்களுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டதுடன் பெண்களின் மரபுசார் உணவு தொடர்பாக இயற்றப்பட்ட பாடல்கள் வில்லுப்பாட்டு இளைஞர் குழுவினால் மேடையேற்றப்பட்டன.

இத்துடன் %0 வயது பெண்ணின் பரத நாட்டியமும் மேடையேற்றப்பட்டு பலரின் பாராட்டுகளும் இந்த நிகழ்ச்சியில் பெறப்பட்டிருந்தது.

இந்த உணவு கொண்டாட்டத்தில் பெண்களால் தங்கள் இல்லங்களில் தயாரிக்கப்பட்ட பலவிதமான மரபுசார் உணவுப் பண்டங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டதுடன் வருகை தந்திருந்த யாவருக்கும் பரிமாறப்பட்டதும் குறிப்பிடத்தக்கது

# கல்யாணக்கால் நடல் சடங்கு!





காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய திருக்குளிர்த்தி சடங்கின் முதல் நாளான நேற்று(29) திங்கட்கிழமை மாலை கடல்தீர்த்தம் எடுத்து வந்து திருக்கல்யாணக் கால் நடலின் போது...

**படங்கள் வி.ரி.சகாதேவராஜா.**





# நீண்ட கால கல்வி சேவையாற்றிய
# குணநாயகம் ஓய்வு பெற்றார்



















(எருவில் துசி)

நீண்ட கால கல்வி சேவையாற்றிய எருவில் கிராமத்தை சேர்ந்த த.குணநாயகம் அவர்கள் 26.05.2023ந் திகதி கோயில்போரதீவு விவேகானந்தா மகாவித்தியாலயத்தில் பிரதி அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

ஆரம்ப கல்வி ஆசிரியராக கல்வி சேவையினை ஆரம்பித்து, ஆலோசனை வழிகட்டல் ஆசிரியராகவும் தொடர்ந்து பிரதி அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

முதல் நியமனத்தினை எருவில் அ.த.கலவன் பாடசாலையில் ஆரம்பித்து கோடைமேடு நவசக்தி வித்தியாலயத்தில் கல்வி கற்பித்து ஆசிரியர் கலாசாலை, களுதாவளை மகாவித்தியாலயம், எருவில் கண்ணகி மகா வித்தியலயத்தில் 19 வருடம் கடமையாற்றி மேலும் செங்கலடி மத்திய கல்லூரி போன்ற பாடசாலைகளில் கல்வி பணியை தொடர்ந்து கோயில்போரதீவு விவேகானந்தா மகாவித்தியலயத்தில் ஓய்வு பெற்றார்.